# ஹஸ்ரத்
# அம்மா ஜான் (ரலி)
## அவர்களின் வாழ்க்கை வரலாறு

சாஹிப்ஸாதீ அமத்துஷ் ஷுகூர்



வெளியிடுவோர்:
லஜ்னா இமாயில்லாஹ்
மேலப்பாளையம்

# ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி)
## அவர்களின் வாழ்க்கை வரலாறு

**சாஹிப்ஸாதீ அமத்துஷ்ஷுகூர் சாஹிபா**

---

வெளியிடுவோர்

**லஜ்னா இமாயில்லாஹ்**

மேலப்பாளையம்

திருநெல்வேலி, தமிழ்நாடு

Tamil Translation of the Book

**Seerat Hazrat Amma Jaan (Ra)**

ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் வாழ்க்கை வரலாறு

| | | |
|---|---|---|
| Author | : | Sahibzadi Amatush Shukoor Sahiba |
| Translated By | : | Muallim J. Nasir Ahmed |
| Composed By | : | J. Mohamed Nooruddeen |
| Year | : | 2023 |
| Copies | : | 500 |
| Publisher | : | Lajna Imaillah<br>Melapalayam, Tirunelveli-Dist, Tamil Nadu |
| Printed at | : | Fazle Umar Printing Press<br>Gurdaspur, Qadian -143 516<br>Punjab |

Noorul Islam Toll Free No : 1800-103-2131

Tamil Toll Free No : 1800-425-40000

## முன்னுரை

1908-ஆம் ஆண்டு மே மாதம், 26-ஆம் நாள் நடந்த சம்பவமாகும். ஜமாஅத்தே அஹ்மதிய்யாவின் தோற்றுநர் சய்யிதுனா ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் சாஹிப் காதியானி (அலை) அவர்கள் மரணமடைந்த அந்தத் தருணம் ஜமாஅத்தைச் சேர்ந்த அனைவருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கும் மிக அதிகமான கவலை மற்றும் வேதனைக்குரிய நேரமாக இருந்தது. அவ்வாறிருந்த போதிலுங்கூட ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மனைவி, ஹஸ்ரத் சய்யிதா நுஸ்ரத் ஜஹான் பேகம் சாஹிபா அவர்கள் தமது குழந்தைகளை அழைத்துக் கொண்டு ஹுஸுர் (அலை) அவர்களின் அருளுக்குரிய உடல் வைக்கப்பட்டிருந்த அறைக்குச் சென்று இவ்வாறு கூறினார்கள்: “குழந்தைகளே! வீட்டை காலியாகப் பார்த்துவிட்டு, உங்கள் தகப்பனார் உங்களுக்கென்று எதையும் விட்டுச் செல்லவில்லை என்று கருதிவிட வேண்டாம். அவர்கள் விண்ணில் உங்களுக்காக துஆக்களின் மாபெரும் கருவூலங்களை விட்டுச் சென்றுள்ளார்கள். அவை உங்களுக்கு அந்தந்த நேரத்தில் கிடைத்துக் கொண்டேயிருக்கும்.”

ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் இந்த வார்த்தைகள், ஹுஸுர் (அலை) அவர்களின் மரணத்தினால் ஏற்பட்ட கவலையை இலகுவாக்கியதோடு மட்டுமல்லாமல், இந்தச் சொற்களே ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் சுருக்கமாகவும் ஆகிவிட்டன. இதிலிருந்து ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களுக்குத் தமது இறைவன் மீது எந்த அளவிற்கு நம்பிக்கையும் தமது மகத்தான கணவரின் உயர் தகுதியின் மீது எந்த அளவிற்கு வலுவான நம்பிக்கையும் இருந்தது என்று தெரிய வருகிறது. ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் இந்த ஈமானையே தமது குழந்தைகளிடம் ஏற்படுத்தி தர்பிய்யத்தின் ஒரு மகத்தான முன்மாதிரியை விட்டுச் சென்றுள்ளார்கள்.

இந்தப் புத்தகத்தின் ஆரம்பப் பிரதிகளை, ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹாஃபிஸ் மிர்ஸா நாஸிர் அஹ்மத் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களும், ஹஸ்ரத் சய்யிதா மன்சூரா பேகம் சாஹிபா அவர்களும் படித்தார்கள். அல்லாஹ் அவர்கள் இருவருடைய அந்தஸ்தையும் உயர்த்துவானாக. (ஆமீன்.)

ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) என்ற இந்த மகத்தான நபரைப் பற்றி அஹ்மதி சிறுவர், சிறுமியருக்கு அறிமுகப்படுத்துவதற்காகவும், தூய வாழ்வு வாழும் வழிமுறையைக் அவர்களுக்குக் கற்பிப்பதற்காகவும் இந்தப் புத்தகம் வெளியிடப்படுகின்றது. இதை எழுதியதற்காக நான், சாஹிப்ஸாதி அமத்துஷ் ஷுகூர் சாஹிபா அவர்களுக்கு உள்ளத்திலிருந்து நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். அல்லாஹ் அவர்களுக்கு, அதற்கான நற்கூலியை வழங்குவானாக. ஆமீன்.

வஸ்ஸலாம்

எளியவன்

மஹ்மூது அஹ்மது

சத்ர் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா

மர்கஸிய்யா, ரப்வா

“ஹஸ்ரத் அம்மா ஜான் அவர்களை நாம் அறிமுகப்படுத்த வேண்டிய தேவையில்லை. இறைவன் யாரைப் புகழ்ந்து விட்டானோ அவர்களுக்கு வேறு என்ன வேண்டியதிருக்கிறது! ஆயினும் நாம் வாழ்நாள் முழுக்க கண்டவற்றை (அவர்களின் முன்மாதிரியை) வருங்கால சந்ததியினரிடமும் வெளிப்படுத்த வேண்டும் என்பது நம்முடைய கடமையாகும்.”

(ஹஸ்ரத் நவாப் முபாரக்கா பேகம் சாஹிபா அவர்கள்)

## பதிப்புரை

சாஹிப்ஸாதீ அமதத்துஷ்ஷுகூர் சாஹிபா அவர்கள் எழுதிய '**சீரத் ஹஸ்ரத் அம்மா ஜான்**' என்ற உர்து நூலை முஅல்லிம் **J. நாஸிர் அஹ்மத் சாஹிப்** தமிழாக்கம் செய்து தந்துள்ளார்கள். அது **ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் வாழ்க்கை வரலாறு** என்ற பெயரில் தமிழில் வெளியிடப்படுகிறது.

இந்த புத்தகத்தை சரிபார்ப்புக் குழு உறுப்பினர்களான மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மது சாஹிப், மவ்லவி அத்தாவுல் முஃக்னீ சாஹிப், மவ்லவி A.P.A. தாரிக் அஹ்மது சாஹிப் ஆகியோர் உருது மூல நூலுடன் சரிபார்த்து திருத்தங்களை செய்துள்ளார்கள். தமிழ் ரிவியூ கமிட்டியின் தலைவர் ஜனாப் J.S. சலீம் அஹ்மது சாஹிப் அவர்களும் இந்த நூலின் தமிழாக்கத்தை முழுமைப்படுத்துவதில் ஒத்துழைப்பு வழங்கியிருக்கிறார்கள்.

அவர்கள் அனைவருக்கும் அல்லாஹ் மேலான வெகுமதியை வழங்குவானாக! ஆமீன்.

வஸ்ஸலாம்.
எளியவன்
**ஹாஃபிஸ் மக்தூம் ஷரீஃப்**
நாஸிர் நஷ்ரோ இஷாஅத்
காதியான்

# பொருளடக்கம்


| | |
|---|---|
| பரம்பரை | 1 |
| ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் பெற்றோர்கள் | 2 |
| ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் பிறப்பும் இளமைப் பருவமும் | 4 |
| ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் திருமணம் | 5 |
| ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மரணத்தின்போது ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் பொறுமை | 15 |
| மாற்றாந்தாய் உறவினர்களுடன் நடந்து கொண்ட முறை | 24 |
| இறைவனின் பார்வையில் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் அந்தஸ்து | 26 |
| ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் குழந்தைகள் | 27 |
| வாழ்வும் நல்லொழுக்கமும் | 33 |
| இரண்டாவது வல்லமையுடன் ஆழமான தொடர்பு | 41 |
| ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் பொருள் தியாகங்கள் | 44 |
| குழந்தைகளுக்கு தர்பிய்யத் | 45 |
| குழந்தைகள் மீதான அன்பு | 49 |
| உறவினர்களிடமும் சந்ததிகளிடமும் காட்டிய அன்பு | 51 |
| அனாதைகளிடம் அக்கறை | 55 |
| பணியாளர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுதல் | 58 |
| தேவையுடையவர்களுக்கு உதவி | 58 |
| தமது வேலையை தாமே செய்தல் | 59 |
| போதுமென்ற மனமும், தியாகமும் | 60 |
| ஷிர்க்கின் மீது வெறுப்பு | 61 |
| விருந்தோம்பல் | 62 |
| இனிய இயல்பு | 63 |
| கல்விக்கு மதிப்பளித்தலும், இலக்கிய ஆர்வமும் | 65 |
| நற்கூலி பெறுவதற்கான ஆர்வம் | 69 |
| சிறந்த நிர்வாகமும் கொடுக்கல் வாங்கலும் | 70 |
| விலங்குகள் மீதான பரிவு | 71 |
| மன்னித்தல் | 72 |
| குறை கூறுதல் மற்றும் புறங்கூறுதல் போன்றவற்றின் மீது வெறுப்பு | 74 |
| துஆ அங்கீகரிக்கப்படுதல் | 74 |
| ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் மரணம் | 80 |

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# வாக்களிக்கப்பட்ட மஸீஹும், இமாம் மஹ்தியுமாகிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் ஹஸ்ரத் நுஸ்ரத் ஜஹான் பேகம் சாஹிபா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்களின் வாழ்க்கை வரலாறு

## பரம்பரை:

அன்பிற்குரிய குழந்தைகளே! ஹஸ்ரத் காஜா முஹம்மத் தாஹிர் என்ற ஒரு பெரியவர் 'புகாரா' என்னுமிடத்திலிருந்து வந்து இந்தியாவின் தலைநகரமாகிய தில்லியில் குடியேறினார்கள். அப்போது இந்தியாவில் பேரரசர் ஔரங்கஸிப் (ரஹ்) அவர்களின் ஆட்சிக் காலமாக இருந்தது. அரசர் ஹஸ்ரத் காஜா முஹம்மத் தாஹிர் அவர்களைத் தனது வழிகாட்டியாக கருதி வந்தார். மேலும் அவருக்கு மிகுந்த மதிப்பளித்தும் வந்தார்.

சய்யிது குடும்பத்தைச் சேர்ந்த இக்குடும்பம் தனது பரம்பரையின் காரணமாக மிகவும் கண்ணியமிக்கதாக கருதப்பட்டது. இந்தக் குடும்பத்தில் பல சான்றோர்கள் தோன்றியிருக்கின்றனர். இந்தக் குடும்பத்தில்தான் ஹிஜ்ரி 12-ஆம் நூற்றாண்டில் தில்லியைச் சேர்ந்த காஜா முஹம்மத் நாஸிர் அவர்கள் பிறந்தார்கள். இவர்கள் அந்த நூற்றாண்டின் வலியுல்லாஹ் (அல்லாஹ்வின் நேசர்) என்று கூறப்படுகின்றது. மேலும் இவருடைய மகன் ஹஸ்ரத் காஜா மீர் தர்து (ரஹ்) அவர்களையும் மக்கள் 13-ஆம் நூற்றாண்டின் வலியுல்லாஹ் என்று கூறுகின்றனர். காஜா மீர் தர்து (ரஹ்) அவர்களின் பரம்பரையில்தான், ஹஸ்ரத் ஸய்யிதா நுஸ்ரத் ஜஹான் பேகம்

(ரலி) அவர்கள் பிறந்தார்கள். இவர்களையே ஹஸ்ரத் அம்மா ஜான் என்றழைக்கிறோம்.

நீங்கள் அனைவரும் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் பெயரை (ஏற்கனவே) கேள்விப்பட்டிருப்பீர்கள். மேலும் நீங்கள் அன்னாரின் வாழ்க்கை வரலாற்றின் சம்பவங்களைப் பற்றி கொஞ்சம் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வம் உடையவர்களாக இருப்பீர்கள். ஆகவே உங்களுடைய இந்த ஆர்வத்தை நிறைவு செய்யும் பொருட்டு நாங்கள் எமது மகத்தான ஆன்மீகத் தாயாரைப் பற்றிய மிக அழகிய விஷயங்களை உங்களுக்கு எடுத்துரைக்க நாடியுள்ளோம்.

## ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் பெற்றோர்கள்:

ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் தந்தையார் பெயர் மீர் நாஸிர் நவாப் சாஹிப். தாயார் பெயர் ஸய்யித் பேகம் சாஹிபா ஆகும்.

இருவரும் மிகமிக நல்லவர்களாகவும், எளிமையானவர் –களுமாக இருந்தனர். மக்கள் அவர்களுக்கு மிகுந்த கண்ணியம் அளித்து வந்தனர். இவர்கள் இருவருமே மார்க்கத்தை கடைபிடிப்பவர்களாகவும், இறைவன் மற்றும் அவனது தூதர் ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்கள் மீது மிகுந்த அன்பு செலுத்தக் கூடியவர்களாகவும் இருந்தனர். மேலும் தொழுகைகளை இடைவிடாது நிறைவேற்றுபவர்களாக இருந்தனர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாதத்திற்குப் பிறகு இருவருமே பைஅத் செய்து அஹ்மதிய்யத்தில் இணைந்து விட்டனர். இவர்கள் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் பெற்றோராக இருப்பதன்

காரணத்தால், அஹ்மதி முஸ்லிம்கள் அனைவரும் இவர்களை நானா ஜான் மற்றும் நானீ ஜான் என்ற பெயரைக் கொண்டே நினைவு கூர்கின்றனர்.

(நானா ஜான் என்றால், தாயின் தகப்பனார் என்றும் நானீ ஜான் என்றால், தாயின் தாயார் என்றும் பொருள்)

ஹஸ்ரத் நானா ஜான், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்காக உயிரை அர்ப்பணிப்பவராகவும் – அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தூய தொண்டராகவும் இருந்தார்கள். அன்னார் (ரலி) அவர்கள் (தொழிலைப் பொருத்தவரையில்) மேற்பார்வையாளராக (Overseer) இருந்தார்கள். காதியானிலுள்ள ஜமாஅத்தின் எல்லா கட்டடங்களுமே ஹஸ்ரத் நானா ஜான் அவர்களால் கட்டப்பட்டவையாகும். அவற்றைக் காணும் பொழுது, மார்க்கத் தொண்டின் மீதுள்ள அன்னாரின் ஆர்வத்தை அறிய முடிகிறது. எவ்வாறு ஹஸ்ரத் நானா ஜான் ஓர் உயர்ந்த ஸய்யித் பரம்பரையைச் சேர்ந்தவராக இருந்தார்களோ அவ்வாறே ஹஸ்ரத் நானீ ஜான் அவர்களின் பரம்பரையும் மிகவும் உயர்ந்ததாக இருந்தது. அவர்களின் தாய்வழிப் பாட்டனாரின் குடும்பமும், தந்தைவழிப் பாட்டனாரின் குடும்பமும் ‘ஸய்யித்’ பரம்பரையாக இருந்தது.

ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள், இவர்களின் மகளாவார்கள். இதுதவிர, இவர்களுக்கு மகன்கள் இரண்டு பேர் இருந்தனர். பெரிய மகன் ஹஸ்ரத் மீர் முஹம்மத் இஸ்மாயீல் சாஹிப், சிறிய மகன் ஹஸ்ரத் மீர் முஹம்மத் இஸ்ஹாக் சாஹிப் ஆவார்கள். ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களுக்குத் தமது இரண்டு சகோதரர்களும் மிகவும் அன்பிற்குரியவர்களாக இருந்தனர். மேலும் இந்த இருவருமே அல்லாஹ்வின் அருளினால் உயிரையும் தியாகம் செய்யும் அளவிற்கு கலப்பற்ற

அஹ்மதிகளாகவும், மார்க்கத் தொண்டாற்றுபவர்களாகவும் இருந்தனர்.

## ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் பிறப்பும், இளமைப் பருவமும்:

ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் 1865-ல் தில்லியில் பிறந்தார்கள். அன்னாரின் பிறப்பிற்கு முன்னதாக ஹஸ்ரத் நானா ஜான் அவர்களின் நிலைமை மிகவும் நெருக்கடியாக இருந்தது. வேலை வாய்ப்பற்றிருந்த காலமாக இருந்தது. ஆனால், ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) பிறந்தவுடனேயே அல்லாஹ்வின் அருளால் நிலைமைகள் நன்றாகி விட்டன. இழந்த சொத்தின் ஒரு பகுதி திரும்பக் கிடைத்து விட்டது. வேலை வாய்ப்பும் கிடைத்ததால் பொருளாதார நிலைமைகள் மிக நன்றாக ஆகி விட்டன. இவ்வாறு அன்னாரின் பிறப்பிலேயே இவர் ஓர் அருளுக்குரிய பெண்மணி என அல்லாஹ் வெளிப்படுத்தி விட்டான்.

ஹஸ்ரத் நானா ஜான் அவர்கள் அன்னாருக்கு வீட்டில் இருந்தவாறே கல்வி கற்பித்தார்கள். திருக்குர்ஆனின் கல்வி மட்டுமின்றி, உர்து எழுதப் படிக்கவும் கற்றுக் கொடுத்தார்கள். ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் இளமைப் பருவத்திலிருந்தே மிகுந்த அறிவாற்றல் உடையவராகவும், திறமைமிக்கவராகவும் இருந்தார்கள். அன்னாருக்கு 'தர்பிய்யத்' (அதாவது மார்க்க ஒழுக்கப்பயிற்சி) முழுக்க முழுக்க இஸ்லாமிய வழிமுறைகளுக்கேற்பவே கொடுக்கப்பட்டது. இவர்கள் அனைவரும் தில்லியைச் சேர்ந்தவர்களாக இருந்ததால், இவர்களின் செயல்பாடுகள், உணவு, உடை ஆகிய அனைத்தும் தில்லியைச் சேர்ந்தவர்களைப் போலவே இருந்தன.

ஹஸ்ரத் நானா ஜான் அவர்கள், ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களுக்கு முதல் பெயர் நுஸ்ரத் ஜஹான் பேகம் என்றும், இரண்டாவது பெயர் ஆயிஷா என்றும் வைத்திருந்தார்கள்.

## ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் திருமணம்:

அந்தக் காலத்தில், பெண்களுக்குத் திருமணம் மிகக் குறைந்த வயதிலேயே செய்து வைக்கப்பட்டது. ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களுக்கு மிக அதிகமான வரன்கள் வந்தன. ஆனால் அன்னாரின் பெற்றோருக்கு எந்த வரனும் பிடிக்கவே இல்லை. ஏதேனும் வரன் நானா ஜானுக்குப் பிடிக்காமல் போய்விடும் என்றால், சில வரன்களை நானீ ஜான் மறுத்து விடுவார்கள். உண்மையில், நானா ஜான் அவர்களுக்கு மார்க்கப் பற்றுமிக்க வரன்களிலேயே தேடல் இருந்தது.

ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களுக்குப் பதினெட்டு வயதானபோது, ஹஸ்ரத் நானா ஜான் அவர்கள் பதற்றமடைந்து (அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுநர்) ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு, ஹுஸூர் அவர்களே! ‘அல்லாஹ் எனக்கு நல்ல ஸாலிஹான மருமகனை வழங்க துஆச் செய்யுங்கள்’ என எழுதினார்கள்.

மறுபுறம், ஹுஸூர் (அலை) அவர்களுக்கு அல்லாஹ்வே இல்ஹாம் மூலமாக கூறினான்: ‘உமக்கு நான் இரண்டாவது திருமணம் செய்துவைக்க நாடியுள்ளேன். மேலும் எல்லா ஏற்பாடுகளையும் நானே செய்து விடுவேன்’. மேலும், ‘உமது திருமண சம்பந்தம் தில்லியின் ஒரு ஸய்யித் பரம்பரையைச் சேர்ந்தவருடன் நிகழும்’ என்றும் அல்லாஹ் கூறினான்.

ஆகவே, ஹஸ்ரத் நானா ஜான் அவர்களின் துஆவிற்கான கடிதம் கிடைத்ததுமே ஹுஸூர் (அலை) அவர்கள்

அல்லாஹ்வின் விருப்பத்திற்கிணங்க தமது திருமணத் தூதை அனுப்பினார்கள். அத்துடன், தாங்கள் என் மீது நல்லெண்ணம் கொண்டு (நம்பிக்கை வைத்து) தங்களது பெண்ணை எனக்குத் திருமணம் செய்து கொடுங்கள் என்றும் எழுதினார்கள்.

அச்சமயம் ஹுஸுர் (அலை) அவர்களின் முதல் மனைவி உயிருடன் இருந்தார்கள். அவர்கள் மூலமாக ஹுஸுர் (அலை) அவர்களுக்கு இரண்டு மகன்களும் இருந்தனர். பெரியவரின் பெயர் மிர்ஸா சுல்தான் அஹ்மத், சிறியவர் பெயர் மிர்ஸா ஃபஸ்ல் அஹ்மத் ஆகும். ஆனால் அன்னாரின் முதல் மனைவியின் இயல்பில் உலக விருப்பம் மிக அதிகமாக இருந்ததுடன், மார்க்க நிலை பலவீனமாக காணப்பட்டது. ஆகவே, கணவன் மனைவிக்கிடையில் மிகச் சிறிய அளவிலேயே தொடர்பிருந்தது. மேலும் ஹுஸுர் (அலை) அவர்கள் மிகுந்த நிம்மதியற்ற வாழ்வு வாழ்ந்து வந்தார்கள். ஆகவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு மற்றொரு திருமணம் செய்து வைக்க அல்லாஹ் விரும்பினான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடனான வரன் வந்தபோது, ஹஸ்ரத் நானீ ஜான் அவர்களுக்கு சில ஆட்சேபனைகள் ஏற்பட்டன. அதாவது, ஹஸ்ரத் மஸீஹ் மவூத் (அலை) அவர்கள் பஞ்சாபைச் சார்ந்தவர். அன்னாரின் வாழ்க்கை முறையும், மொழியும் தில்லியைச் சார்ந்தவர்களை விட வேறுபட்டதாகும். வயதும் அதிகமாக உள்ளது. ஏற்கனவே திருமணமும் ஆகியிருக்கிறது.

இதற்கு இடைப்பட்ட காலத்தில் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களுக்கு நிறைய வரன்கள் வந்தன. ஆனால், நானீ ஜான் அவர்களுக்கு அந்த வரன்கள் பிடிக்கவில்லை. இறுதியில் ஒருநாள் கூறினார்கள்: **அவர்களை விட குலாம் அஹ்மத் ஆயிரம் மடங்கு சிறந்தவர் ஆவார்.**

ஹஸ்ரத் நானா ஜான் அவர்களும் முதலிலேயே இதைத் தான் விரும்பினார்கள். ஆகவே அவர்கள் இதனைப் பொன்னான சந்தர்ப்பமாகக் கருதி விரைவாகவே ஹுஸூர் (அலை) அவர்களுக்கு மகளைத் திருமணம் முடித்துக் கொடுக்க தனது சம்மதத்திற்கான தகவலைத் தெரிவித்தார்கள். சில காலத்திற்குப் பிறகு, ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் மணம் முடித்து தில்லியிலிருந்து காதியான் அழைத்து வரப்பட்டார்கள். அன்னாரின் நிக்காஹ், தில்லி ஜாமிஆ மஸ்ஜிதின் பிரபலமான கதீப் தில்லியைச் சேர்ந்த 'ஸய்யித் நஸீர் ஹுஸைன்' அவர்களால் நடத்தப்பட்டது.

வாழ்க்கை முறை, மொழி ஆகியவற்றில் வேறுபாடு இருந்தபோதிலுங்கூட, ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் அந்தச் சுற்றுச் சூழலில் மிகச் சிறப்பாக தம்மை பழக்கப்படுத்திக் கொண்டார்கள். இதன் மூலமாக அன்னாரின் புரிதல், தகுதி மற்றும் அசாதாரணமான சிறப்புகள் பற்றித் தெரிய வருகின்றது. ஏனென்றால், இவை எந்தவொரு சாதாரண பெண்ணின் ஆற்றலுக்கும் உட்பட்டதல்ல. ஆரம்பத்தில் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் மிகுந்த பதற்றமடைந்திருந்தார்கள். எந்த அளவிற்கு என்றால், (அன்னார்) ஹஸ்ரத் நானீ ஜான் அவர்களுக்கு இவ்வாறு எழுதி அனுப்பினார்கள்: 'நான் எந்த அளவிற்கு பதற்றமடைந்துள்ளேன் என்றால், ஒருவேளை நான் கவலை மற்றும் பதற்றத்தால் மரணித்து விடுவேன் போல் உள்ளது.'

ஆனால் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் ஒரு மாதத்திற்குப் பிறகு தில்லி சென்றவுடன், ஹஸ்ரத் நானீ ஜான் அவர்களிடம் தாமாகவே கூறினார்கள்: 'என்னை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மிகுந்த

அக்கறையுடன் கவனித்துக் கொள்கிறார்கள். நான்தான் தேவையில்லாமல் பதற்றமடைந்து விட்டேன்.' ஆரம்பகாலத்தில் அன்னார் பதற்றமடைந்தது ஓர் இயல்பான விஷயமே. இது குறித்து ஹஸ்ரத் நவாப் முபாரக்கா பேகம் ஸாஹிபா அவர்கள் கூறுகின்றார்கள்: ஒருமுறை ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

'உனது தந்தை, என்னைத் திருமணம் முடித்து அழைத்து வந்த போது, (எங்களது திருமணத்தின் காரணமாக) இங்குள்ள குடும்பத்தார் அனைவரும் மிக அதிகமாக எதிர்ப்பு காட்டினர். வீட்டில் இரண்டு அல்லது நான்கு ஆண் பணியாளர்கள் இருந்தனர். அந்த அப்பாவிகளின் உணவையும் குடும்பத்தார்கள் நிறுத்தி வைத்திருந்தனர். வீட்டில் எந்தப் பெண்ணும் இருக்கவில்லை. என்னோடு ஃபாத்திமா பேகம் மட்டும் இருந்தார்கள். (இந்த பணிப்பெண் தில்லியிலிருந்து என்னுடன் வந்தவர் ஆவார்.) அவரால் யாருடைய பேச்சையும் புரிந்து கொள்ளவும் முடியாதிருந்தது; அவர் பேசுவதையும் யாராலும் புரிந்து கொள்ள முடியவில்லை. நாங்கள் வந்தடைந்த போது மாலைப் பொழுதாகிவிட்டது. இன்னும் கூறுவதாயின் இரவாகி விட்டது. யாருமில்லாத தனிமை, வெளியூர் (ஆகிய காரணத்தால்) என்னுடைய உள்ளத்தின் நிலை விசித்திரமானதாக இருந்தது. மேலும் அழுதழுது எனது நிலை மிக மோசமாக இருந்தது.

எனக்கு ஆறுதலளிப்பதற்கோ, முகம் துடைத்துவிடவோ, உணவளிக்கவோ, எனது எந்தவோர் உறவினரும் என்னுடன் இருக்கவில்லை. தனிமையிலும், அதிர்ச்சியிலும், வேதனையிலும் இருந்தேன். அறையில் ஒரு கட்டில் கிடந்தது. அதில் கால் நீட்டும் பகுதியில் ஒரு துணி கிடந்தது. அதில் நான் களைப்படைந்த நிலையில் படுத்து விட்டேன். பிறகு பொழுது விடிந்தது. அப்போது

ஹுஸூர் (அலை) அவர்கள் மறுநாள் காலையில் ஒரு பணிப்பெண்ணை அழைத்து, வீட்டில் ஓய்வெடுப்பதற்காக அனைத்துவகை ஏற்பாடுகளையும் செய்தார்கள்.'

குழந்தைகளே! அல்லாஹ் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களுக்கு என்ன ஒரு மிகப்பெரும் மகத்தான கண்ணியம் அளித்திருந்தானென்றால், அன்னாருடைய பரம்பரையின் ஓர் இறைநேசருக்கு (அவரைப் பற்றி நீங்கள் துவக்கத்தில் படித்திருக்கின்றீர்கள்) இந்தத் திருமணம் குறித்து முன்னதாகவே இறைவன் அறிவித்திருந்தான். பிறகு, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கும் இந்தத் திருமணம் பற்றி இல்ஹாம் இறங்கியது. ஆக, இந்தத் திருமணம் இறைவிருப்பத்திற்கேற்பவே நிகழ்ந்தது.

இந்த விஷயங்களின் காரணத்தாலும், ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களுக்குரிய தனிப்பட்ட மேன்மைகளின் காரணத்தாலும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், அன்னாரின் மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தார்கள். அன்னாருக்கு மிகுந்த கண்ணியமும், மதிப்பும் அளித்து வந்தார்கள். மேலும், அவர்களை தம்முடைய பரக்கத்திற்குரிய நபராக கருதி வந்தார்கள். ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களுக்கும் இது குறித்து அதிக உணர்விருந்தது. மேலும், சில நேரங்களில் அதிக அன்போடும், பெருமிதத்தோடும் 'நான் வந்தபிறகு தங்களுடைய வாழ்க்கையில் பரக்கத்துகளின் (அபிவிருத்திகளின்) காலம் துவங்கி உள்ளது' என்று கூறி வந்தார்கள். இதைக் கேட்டு விட்டு ஹுஸூர் (அலை) புன்னகைத்த வண்ணம் 'ஆம்! இது சரியே' என பதிலளிப்பார்கள்.

ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களும் ஹுஸூர் (அலை) அவர்களிடம் மிகுந்த அன்பு செலுத்தி வந்தார்கள். மேலும், இரு

நெஞ்சங்களில் ஒரே இதயம் துடிப்பது போல் (ஒற்றுமை இருப்பதாக காண்போருக்கு) தெரிய வரும். எவ்வாறு சாதாரண கணவன், மனைவிக்கிடையில் சண்டைச் சச்சரவு ஏற்படுமோ, அவ்வாறு இவர்கள் இருவருக்கிடையில் ஒருபோதும் எந்தவொரு சண்டைச் சச்சரவும் ஏற்பட்டதில்லை. ஹுஸூர் (அலை), ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களுடன் அன்போடு மென்மையான முறையில் பேசி வந்தார்கள். வீட்டு வேலைகளில் எப்போதாவதொரு குறைவு ஏற்பட்டாலுங்கூட அன்னார் ஒன்றுமே கூற மாட்டார்கள். ஒரு சம்பவத்தை ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களே இவ்வாறு கூறியிருக்கின்றார்கள்:

'நான் முதன் முதலில் தில்லியிலிருந்து வந்தபோது, ஹுஸூர் (அலை) அவர்களுக்கு வெல்லம் கலந்த (இனிப்புச்) சோறு மிகவும் பிடிக்கும் என எனக்குத் தெரிய வந்தது. நான் மிகுந்த ஆவலுடன் அதை சமைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்தேன். சிறிதளவு அரிசியை வாங்கி அதில் நான்கு மடங்கு வெல்லத்தைப் போட்டு விட்டேன். அது வெல்லப்பாகு ஆக ஆகிவிட்டது. சட்டியை அடுப்பிலிருந்து இறக்கி சோற்றை தட்டில் எடுத்துப் பார்த்தபோது, இவையோ வீணாகி விட்டனவே என்று மிக அதிக துக்கமும் வேதனையும் ஏற்பட்டது. மறுபுறம் உணவிற்கான நேரம் வந்துவிட்டது. இப்போது என்ன செய்வேன் என்ற வியப்பில் இருந்தேன். அதற்குள் ஹஸ்ரத் ஸாஹிப் [வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை)] வந்துவிட்டார்கள். என்னுடைய முகத்தைப் பார்த்தார்கள். அது துக்கம் மற்றும் வேதனையால் அழுபவர்களைப் போல் ஆகியிருந்தது.' வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) பார்த்துவிட்டு சிரித்தார்கள். 'என்ன! உணவு நன்றாக சமைக்கப்படவில்லை என வருத்தமா?' என்று கேட்டார்கள்.

'இவையோ மிக சுவையாக உள்ளன. என்னுடைய விருப்பத்திற்கேற்ப சமைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறான அதிக

வெல்லமுடைய உணவே எனக்கு மிகவும் பிடிக்கும். இவையோ மிகவும் நன்றாக உள்ளன' என்று கூறினார்கள்.

மேலும், அன்னார் மிகுந்த சந்தோஷத்துடன் சாப்பிட்டார்கள். ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் கூறி வந்தார்கள். ஹஸ்ரத் ஸாஹிப், என்னை மகிழ்ச்சியூட்டுவதற்காக இவ்வளவு விஷயங்களைக் கூறினார்கள். அதனால் என்னுடைய உள்ளமும் மகிழ்ச்சியடைந்தது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களை இறை அடையாளங்களில் ஓர் அடையாளமாக கருதி வந்தார்கள். எந்த விஷயத்தை அவர்கள் செய்யும்படி கூறினாலும் அதனை நிறைவேற்ற முழு முயற்சி செய்து வந்தார்கள். மனைவிமார்(களின் தேவை)களை கவனத்தில் கொள்ள வேண்டும் என ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பொதுவாகவும் கூறி வந்தார்கள்.

ஹுஸூர் (அலை) அவர்களின் கருணைகளின் ஓர் உதாரணத்தை உங்களுக்குக் கூறுகிறேன். ஒருமுறை, ஹுஸூர் அவர்கள் தங்கி வந்த 'தாருல் மஸீஹ்'-ன் அந்தப் பகுதியில் ஒரு முற்றம் இருந்தது. அதன் ஒரு ஜன்னல், தெற்குப் பக்கம் 'முஹல்லா கூச்சா பந்தி'-யை நோக்கி திறந்து கொள்ளும் வண்ணம் இருந்தது. கோடை காலங்களில் இரவு நேரத்தில் ஹுஸூர் (அலை) அவர்களும், அன்னாரின் குடும்பத்தார் அனைவரும் அந்த முற்றத்தில் உறங்கி வந்தார்கள். ஆனால், மழைக்காலத்தில் மழை பெய்யும் போது எல்லாக் கட்டில்களையும் அறைகளுக்கு எடுத்துச் செல்ல வேண்டிய கஷ்டம் இருந்தது. இதனால், ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள், இந்த முற்றத்தின் ஒரு பகுதியில் மேல்தளம் போட வேண்டும். அதாவது,

வராண்டா போன்று அமைக்க வேண்டும். அப்போதுதான் மழை பெய்யும் போது கட்டில்களை அதற்குள் கொண்டு வர இயலும் என ஆலோசனை கூறினார்கள். அவ்வாறே செய்ய வேண்டும் என ஹுஸுர் (அலை) அவர்கள் கட்டளையிட்டார்கள். ஹஸ்ரத் மௌலவி அப்துல் கரீம் சாஹிப் மற்றும் சில தோழர்கள், அவ்வாறு செய்ய வேண்டாம். முற்றத்தின் தோற்றம் மோசமாகிவிடும். அழகு குன்றி விடும் என்று ஆட்சேபணை செய்தார்கள்.

ஆனால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அனைவரின் பேச்சையும் கேட்டு விட்டு, 'சரிதான்! இருந்தபோதிலும், என் மனைவி இறை அடையாளங்களில் ஓர் அடையாளம் ஆவார். மேலும் எனது எந்தக் குழந்தைகளைப் பற்றி இறைவன் எனக்கு நற்செய்தி வழங்கியிருக்கின்றானோ அந்தக் குழந்தைகளின் தாய் ஆவார். ஆகவே நான் அவரின் ஒவ்வொரு விஷயத்தையும் ஏற்பேன். ஆகையால் இந்த வராண்டா அமைக்கப்பட வேண்டும்' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் தமது ஒரு சம்பவத்தை கூறி வந்தார்கள். அவர்கள் முதன் முதலில் காதியான் வந்தபோது, அவர்களுக்கு வெளிச்சத்தில் உறங்கும் பழக்கம் இருந்தது. அவர்கள் உறங்கிய பிறகு ஹுஸுர் (அலை) அவர்கள் விளக்கை அணைத்து விடுவார்கள். பிறகு ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் கண்கள் திறக்கும்போது, அன்னார் இருளைக் கண்டு பதற்றமடைந்து எழுந்து விடுவார்கள். பிறகு ஹுஸுர் (அலை) மீண்டும் விளக்கை ஏற்றி விடுவார்கள். இறுதியில் ஹுஸுர் (அலை) அவர்களுக்கே வெளிச்சத்தில் உறங்கும் பழக்கம் ஏற்பட்டு விட்டது. அடுத்து நடந்தது என்னவெனில், வீட்டின் ஒவ்வொரு மூலையிலும் வெளிச்சம்

இருக்கத் துவங்கியது. ஏணிப்படிகள், குளியலறை, அறை, வளாகம் என்று (இவ்வாறு) அனைத்து இடங்களிலும் விளக்கேற்றப்பட்டே இருந்தது. பிறகு இதற்கென குறிப்பிட்ட ஒரு பணியாளர் நியமிக்கப்பட்டிருந்தார். சில வேளைகளில் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள், அன்போடு ஹுஸுர் (அலை) அவர்களுக்கு நினைவூட்டி வந்தார்கள்: 'உங்களுக்கு அந்த நேரம் நினைவிருக்கிறதா? அப்போது உங்களால் வெளிச்சத்தில் உறங்க முடியாது. ஆனால் இப்போது வீட்டின் ஒவ்வொரு மூலைகளிலும் வெளிச்சமில்லை என்றால் உங்களுக்கு உறக்கம் வருவதில்லை.'

ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்கள் இந்த விஷயத்தைக் கேட்டு விட்டு எப்போதும் மகிழ்ச்சியாக புன்னகைத்து வந்தார்கள்.

குழந்தைகளே! ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களையும், ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களையும் எத்தனை பேர் அருகில் இருந்து பார்த்து இருக்கின்றார்களோ, உதாரணத்திற்கு ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் இரண்டு சகோதரர்கள், அன்னாரின் குழந்தைகள், மருமகள்கள் மற்றும் பணிப்பெண்கள் ஆகியோர் அனைவரின் கூற்றும் என்னவென்றால், இவர்கள் இருவரும் சாதாரணமான கணவன், மனைவியைப் போன்றவர்கள் அல்ல. இவர்களுக்கிடையே ஒருபோதும் சண்டை ஏற்பட்டதே இல்லை. எந்த விஷயத்திலும் சச்சரவு ஏற்பட்டதில்லை.

ஒருபுறம் ஹுஸுர் (அலை) அவர்கள், ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் ஒவ்வொரு விஷயத்தையும் ஏற்றுக் கொண்டும், அன்பு செலுத்தியும் மற்றும் பேருதவிகள் செய்தும் வந்த அதே நேரத்தில், மறுபுறம் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களும் ஹுஸுர் (அலை) அவர்களின் சின்னஞ்சிறு விருப்பம், விருப்பமின்மையை கவனத்திற்கொண்டு

செயல்பட்டார்கள். பெரும்பாலும் தாமே உணவையும் சமைத்து வந்தார்கள். அல்லது தமது கண்காணிப்பில் சமைக்கச் செய்து வந்தார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மற்ற வேலைகளிலும் ஒரு நண்பன், மற்றொரு நண்பனின் வேலைகளை செய்வதைப் போன்று உதவி செய்து வந்தார்கள்.

ஹுஸுர் (அலை) அவர்கள், ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களை நீங்கள் என்று அழைப்பார்கள். மேலும், ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் தாய்மொழியான உர்துவிலே பேசுவார்கள். எப்பொழுதாவது, பஞ்சாபியிலும் பேசுவார்கள். ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களும் அன்னாரை, கண்ணியத்தோடு ஹுஸுர் அல்லது ஹஸ்ரத் ஸாஹிப் என்றே அழைத்து வந்தார்கள். சுருங்கக்கூறின், இந்த ஜோடி ஒரு நிகரற்ற ஜோடியாக இருந்தது. இவ்விருவருக்கிடையில் இருந்த அன்பு பொதுவாக காணக்கிடைக்காத அன்பாக இருந்தது.

ஒருமுறை ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் தொழத் துவங்கிய போது, நிய்யத் வைப்பதற்கு முன்பாக, அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவூது (அலை) அவர்களிடம் கூறினார்கள்: ‘நான் எப்போதும் என்ன துஆச் செய்கிறேன் என்றால், அல்லாஹ் எனக்கு உங்களுடைய (பிரிவின்) துக்கத்தை காண்பிக்காதிருப்பானாக. மேலும், என்னை உங்களுக்கு முன்னதாக அழைத்துக் கொள்வானாக.’

இதைக் கேட்டு விட்டு, ஹுஸுர் (அலை) கூறினார்கள்: ‘நான் எப்போதும் என்ன துஆச் செய்கிறேன் என்றால், நீங்கள் எனக்குப் பிறகு உயிருடன் இருக்க வேண்டும். மேலும், நான் உங்களை நிம்மதி உடையவராக விட்டுச் செல்ல வேண்டும்.’

மேலும், அவ்வாறே ஆனது. ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களை விட, நாற்பத்தி நான்கு ஆண்டுகள் முன்னதாக ஹுஸூர் (அலை) அவர்களின் வஃபாத் நிகழ்ந்தது.

## ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மரணத்தின் போது ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் பொறுமை:

1908-ஆம் ஆண்டு மே மாதம் 26-ஆம் தேதி, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் (உடல்) நிலை மிகவும் மோசமாகி விட்டது. ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் துடிதுடித்து துஆக்களைச் செய்து வந்தார்கள். சில நேரம் ஸஜ்தாவில் விழுந்து விடுவார்கள். சில நேரம் நிம்மதியிழந்த நிலையில் உலாவியவாறு 'உயிருடனிருப்பவனும், நிலைத்திருப்பவனுமாகிய இறைவா! என்னுடைய வாழ்க்கையையும் நீ அவர்களுக்கு வழங்கி விடுவாயாக!' என்று துஆச் செய்வார்கள். ஆனால் இறைநியதிக்கேற்ப ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை), (இவ்வுலகை விட்டுச் செல்லும்) நேரம் வந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உயிர் பிரியும் நேரம் வந்தபோது, ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் மீண்டும் மீண்டும் இவ்வாறு துஆச் செய்தார்கள்: 'எனது அன்பிற்குரிய இறைவா! இவர்கள் எங்களை விட்டுச் செல்கின்றார்கள். ஆனால் நீ எங்களை விட்டு விடாதே.' இறுதியில் இரவு 10 மணிக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அனைவரையும் பரிதவிப்பில் விட்டு விட்டு தம் விண்ணின் எஜமானனிடம் சென்றடைந்தார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள், அப்போது காட்டிய பொறுமைக்கான முன்மாதிரி ஒப்பற்றது. உள்ளமோ இரத்தக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தது. ஆனால், நாவில்

இன்னாலில்லாஹ் மட்டுமே இருந்தது. அவ்வளவுதான். மாறாக, அங்கிருந்த சில பெண்கள் சப்தமிட்டு அழத் துவங்கிய போது, ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் உரத்த குரலில் அவர்களைக் கண்டித்தார்கள். மேலும் 'எனக்கு அவர்கள் கணவர் ஆவார்கள். நான் அழவில்லை. அழுகின்ற நீங்கள் யார்?' எனக் கூறினார்கள்.

சிறிது நேரத்திற்கு பிறகு, ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் தமது பிள்ளைகளை ஒன்று கூட்டினார்கள். பிறகு, அவர்களுக்கு இவ்வாறு அறிவுரை கூறினார்கள்: "குழந்தைகளே! வீட்டை வெறுமையாகப் பார்த்துவிட்டு, உங்கள் தகப்பனார் உங்களுக்கென்று எதையும் விட்டுச் செல்லவில்லை என்று கருதிவிட வேண்டாம். அவர்கள் விண்ணில் உங்களுக்காக துஆக்களின் மாபெரும் கருவூலங்களை விட்டுச் சென்றுள்ளார்கள். அது உங்களுக்கு அந்தந்த நேரத்திற்கு கிடைத்துக் கொண்டேயிருக்கும்."

ஹுஸூர் (அலை) அவர்களின் ஜனாஸா லாஹூரிலிருந்து காதியான் கொண்டு வரப்பட்டது. பட்டாலாவிலிருந்து, மாட்டு வண்டியில் வைக்கப்பட்டது. ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களும், கூடவே ரதத்தில் சவாரி செய்தவாறு வந்தார்கள். ஹஸ்ரத் பாயி அப்துர் ரஹ்மான் சாஹிப் காதியானி அவர்கள் ட்யூட்டியில் (Duty) அவர்களுடன் இருந்தார்கள். ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் முழுப் பயணத்திலும் துஆக்களில் ஈடுபட்டிருந்தார்கள்.

ஜனாஸா 'பெஹிஷ்த்தி மக்பரா' ஒட்டிய தோட்டத்தில் வைக்கப்பட்டது. ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அருளுக்குரிய முகத்தைப் பார்க்க வந்தபோது, அன்னாரின் கால்பக்கமாக

நின்றவாறு மிகவும் கம்பீரமான குரலில், ‘தாங்கள் இருந்த காரணத்தால் என் வீட்டில் வானவர்கள் இறங்கி வந்தனர். மேலும் இறைவன் உரையாடி வந்தான்’ என்று கூறினார்கள்.

இதுவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்துவத்திற்கு, ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் வழங்கிய சாட்சியம் ஆகும். மேலும் இதனைக் கொண்டு, அன்னாரின் ஈமானின் உறுதியும் ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களின் மீது இருந்த நம்பிக்கையும், அன்பும் தெரிகின்றது.

ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மீது உண்மையான உள்ளத்துடன் ஈமான் கொண்டிருந்தார்கள். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாதத்தையும், இல்ஹாம்களையும் உண்மையென ஏற்று ஒப்புக்கொண்டு வந்தார்கள். ஒருபோதும் எவ்வகையான சந்தேகமோ, ஐயமோ அன்னாரின் உள்ளத்தில் தோன்றவில்லை.

ஆகவே குழந்தைகளே! ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் முதல் நாளிலிருந்தே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது ஈமான் கொண்டு வந்தார்கள். அன்னாரின் வாதத்திற்கு முன்னரும் (அன்னாரை) இறைநேசர் என ஒப்புக் கொண்டு வந்தார்கள். இந்த இடத்தில் நாம், உங்களுக்கு ஒரு சிறிய சம்பவத்தைக் கூறுகின்றோம். இதனை ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் தமது மகள் ஹஸ்ரத் நவாப் முபாரக்கா பேகம் சாஹிபா அவர்களுக்குக் கூறியுள்ளார்கள். அவர்கள் கூறினார்கள்: “நான் முதன்முதலாக புதிதாக (காதியான்) வந்தபோது, [ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை)] அவர்களின் ஒரு விஷயம் எனக்குள் பெரிய

தாக்கத்தை ஏற்படுத்தியது. அது என்னவென்றால், பணிப்பெண் பால் காய்ச்சிக் கொண்டிருந்தாள். அப்போது, பால் பொங்கியவுடன், அவள் மூடியைத் திறந்து விட்டாள். தற்செயலாக ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களின் பார்வை (அதன் மீது) பட்டது. அன்னார் உடனே கூறினார்கள்: 'பால் திறந்துள்ளது. இது கண்டிப்பாக திரிந்து விடும்.' என்னுடைய உள்ளத்தில், பால் கொதிக்க வைக்கும்போது மூடியை அகற்றத் தானே வேண்டும். இதனால் பால் எதற்காக திரியப் போகின்றது. ஆண்களுக்கு (சமையல் பற்றி) ஒன்றும் தெரியாது. ஆகவே அவ்வாறு கூறி விடுகின்றனர் என்ற எண்ணம் வந்தது. என்னுடைய உள்ளத்தில் இந்த எண்ணம் ஓடிக் கொண்டிருந்த வேளையில் பால் திரிந்து போனது. இந்தச் சம்பவத்தால் என்னுடைய உள்ளத்தில் ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களின் மதிப்பச்சம் ஏற்பட்டது. இவர் ஒரு மிகப்பெரிய மகான் என்று நான் உறுதி கொண்டு விட்டேன்."

ஹுஸூர் (அலை) அவர்களின் வஃபாத்திற்குப் பிறகு, ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் முற்றிலும் மாறி விட்டார்கள். அன்னார் அமைதியும், நிம்மதியும் இழந்து காணப்பட்டார்கள். அதற்குப் பகரமாக பதற்றமும், நிம்மதியற்ற நிலையும் காணப்பட்டது. ஹஸ்ரத் நவாப் முபாரக்கா பேகம் சாஹிபா அன்னாரின் வாழ்க்கையைப் பற்றி இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

"ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மரணத்திற்குப் பிறகு, அன்னாரிடம் ஒரு மாபெரும் மாற்றம் ஏற்பட்டது. பிறகு நான் அவர்களை அமைதி நிறைந்தவராகவும், நிம்மதிமிக்கவராகவும் பார்த்ததில்லை. குழந்தைகளாகிய எங்களின் காரணத்தால் மிகுந்த பொறுமையோடு இருந்தார்கள். ஆனால், அன்னாரின் இயல்பில் எல்லையில்லா பதற்றமும்,

நிம்மதியற்ற நிலையும் உருவாகியிருந்தது. அது பிறகு, ஒருபோதும் நீங்கவில்லை. (காண்போருக்கு) எவ்வாறு தெரியும் எனில், அன்னார் இவ்வுலகில் இருக்கவும் செய்கின்றார்கள். இல்லாதது போலவும் இருக்கின்றார்கள். அன்னார் எந்தஅளவு நிம்மதியற்று இருந்தார்கள் என்றால், அன்னார் எதையோ பறி கொடுத்தது போல் இருப்பார்கள்.”

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்மீது, ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களுக்கு இருந்த அசாதாரணமான அன்பு குறித்து ஹஸ்ரத் நவாப் முபாரக்கா பேகம் சாஹிபா எழுதுகின்றார்கள்:

“ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் அடிக்கடி பயணம் செய்து வந்தார்கள். வெளிப்படையாக தம்மை தாமே தேற்றிக் கொள்வார்கள். பெண்களை உடன் அழைத்துக் கொண்டு தோட்டத்திற்கோ அல்லது கிராமங்களுக்கோ உலாவச் சென்று விடுவார்கள். வீட்டில் ஏதேனுமொரு வேலையை செய்ய வைப்பார்கள். சமைக்கச் செய்வார்கள். பல நேரங்களில், ஏழை எளிய மக்களுக்கு (அதனை) பகிர்ந்தளிப்பார்கள். (இந்தச் செயல் அன்னாருக்கு அதிகம் விருப்பமுள்ளதாக இருந்தது).

மக்கள் (வீட்டிற்கு) வந்துபோய் இருந்தார்கள். தனது பிள்ளைகளின் மனமகிழ்ச்சியூட்டும் விஷயங்களும் இருந்தன. இவை அனைத்தும் இருந்தபோதிலுங்கூட, ஹுஸுர் (அலை) அவர்களு(டைய பிரிவு)க்குப் பிறகு, அன்னார் முழுமையான நிம்மதியை ஒருபோதும் உணர்ந்ததில்லை. ஏதோ ஒருவர் தன்னுடைய காலத்தை கழித்துக் கொண்டிருக்கின்றார். கடக்க வேண்டிய பயணம் இருக்கின்றது. துரிதமாக செய்ய வேண்டிய சில வேலைகள் இருக்கின்றன என்பதுபோல் தெளிவாகத் தெரியும். வெளிப்படையில் (அன்னார்) பொறுமையின் சிகரமாக

விளங்கினார்கள். ஆனால், அன்னாரிடம் எப்போதும் ஒருவகையான பதற்றம் நிலவியிருந்தது. இருப்பினும், குழந்தைகளுக்காக தமது இந்த கவலைகளை மறைத்து வைத்தார்கள். மேலும் அனைவரின் மகிழ்வுக்குரிய காரணிகளை ஏற்படுத்துவார்கள். குடும்பத்தில் ஏதேனும் குழந்தை பிறந்தால், மகிழ்ச்சி ஏற்படுவதுடன் ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களின் பிரிவின் வேதனையும் மீண்டும் நினைவுபடுத்தப்பட்டு விடும். மேலும் அன்னார், அந்தக் குழந்தையின் வருகையினாலும் ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களை மிக அதிகமாக நினைவு கூர்வார்கள். நான் என்னைக் குறித்தும் என்ன கண்டேன் என்றால், ஹஸ்ரத் சாஹிபின் மரணத்திற்குப் பிறகு, ஓர் அன்பின் ஊற்று ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் உள்ளத்தில் பெருக்கெடுத்து இருந்தது. மேலும் அன்னார், மீண்டும் மீண்டும் கூறுவார்கள். உமது தந்தை உமது எல்லா விஷயத்தையும் ஏற்றுக் கொள்வார்கள். நான் ஆட்சேபணை செய்தால் இவ்வாறு கூறுவார்கள்: ‘பெண் பிள்ளைகள் நான்கு நாள் விருந்தாளிகளைப் போன்றவர்களாவார்கள். இவள் என்ன நினைவில் கொள்ளப் போகின்றாள். இவள் என்ன கூறுகிறாளோ அவ்வாறே செய்யுங்கள்.”

சுருங்கக்கூறின், இந்த அன்பும் ஹுஸூர் (அலை) அவர்களின் அன்பே ஆகும். இதுவே அன்னாரின் உள்ளத்திலும் இருந்தது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு, ஹஜ் செய்ய வேண்டுமென எல்லையில்லா ஆவல் இருந்தது. இருந்தபோதிலும் சூழ்நிலைகளின் காரணமாக ஹஜ் செய்ய இயலவில்லை. ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள், அன்னாரின் மரணத்திற்குப் பிறகு அன்னாரின் இந்த

ஆசையை நினைவில் வைத்திருந்தார்கள். பிறகு, அதனை எவ்வாறு பூர்த்தி செய்தார்கள் என்றால், ஒரு நபருக்கு, தம்மிடமிருந்து பணத்தை வழங்கி ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களின் சார்பாக அவரை ஹஜ் செய்ய அனுப்பினார்கள். ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) ஞாபகம் வரும்போது, திருக்குர்ஆன் ஓதத் தொடங்குவது அன்னாரின் பழக்கமாக இருந்தது.

அவர்கள் இன்னும் பல்வேறு விதங்களில் ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களின் நினைவுகளை உயிர்ப்பித்து வந்தார்கள். தினசரி காலை பெஹிஷ்த்தி மக்பரா சென்று, ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களின் மண்ணறையில் துஆச் செய்வது அன்னாரின் வழக்கமாக இருந்தது. ஹுஸூர் (அலை) அவர்களுக்கு எந்த உணவு பிடிக்குமோ, அதை சமைக்கச் செய்து அல்லது தாமே சமைத்து மக்களுக்கு வழங்கி வந்தார்கள். மேலும், ‘சாப்பிடுங்கள். இது, ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்களுக்கு மிகவும் பிடித்தமானதாக இருந்தது’ என்று கூறுவார்கள்.

ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களுக்கு, காதியானின் மீதும் மிகுந்த அன்பு இருந்தது. பாகிஸ்தான் உருவான பிறகு, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் நிரந்தரமாக ரப்வா சென்றபோது (சௌத்ரி அப்துல்லாஹ் கான் சாஹிப் அவர்களின் மனைவி) மதிப்பிற்குரிய சகோதரி ஆமினா சாஹிபா அவர்களும் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களுடன் இருந்தார்கள். அவர்கள் கூறுகின்றார்கள்: “எந்த வீட்டில் நாங்கள் உணவு உண்டோமோ அதனுடைய வராண்டாவில் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் அமர்ந்து வந்தார்கள். நான் சென்று அருகில் அமர்ந்து விட்டேன். பேச்சோடு பேச்சாக நான் ‘ரப்வா காதியானைப் போன்றே இருக்கின்றது. இது காதியானின் கவலையை அகற்றி விடும்’ என்றும் கூறிவிட்டேன்.

ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் எனது அருகில் படுத்திருந்தார்கள்; உத்வேகத்தோடு எழுந்து அமர்ந்து விட்டார்கள்; என்னுடைய தோள்பட்டையை சற்று அழுத்தியவாறு ஆதங்கத்தோடு, “எங்கு ஹுஸுர் (அலை) அவர்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளார்களோ அந்த இடத்தை நீங்கள் மறந்து விடுவீர்களா? என்று கேட்டார்கள்.”

ஒருமுறை ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் லாஹூரில் நீலா கும்பந்த் என்ற இடத்தில் அமைந்துள்ள மதிப்பிற்குரிய அப்துல்லாஹ் சாஹிப் வீட்டிற்குச் சென்றிருந் –தார்கள். அவர்களின் வீட்டிலுள்ளவர்கள் அன்னாரிடம் கூறினார்கள்: “இந்த வீடு மிகவும் சிறியதாக இருக்கிறது. இறைவன் எங்களுக்குச் சிறந்த வீட்டை வழங்க துஆச் செய்யுங்கள்” என்று கூறினார்கள். இதைக் கேட்டு விட்டு ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் கூறினார்கள்: “அவ்வாறன்று; இந்த வீடு உங்களுக்கு மிகுந்த அபிவிருத்திகள் (பரக்கத்துகள்) அடங்கியதாகும். ஏனென்றால், இங்கு ஹுஸுர் வந்து சென்றிருக் –கின்றார்கள். (எனவே) இந்த வீட்டை விட்டு விட வேண்டாம்.”

ஆக, அன்னாருக்கு ஹுஸுர் (அலை) எப்பொழுதாவது சென்ற வீடுகள், எந்தப் பாதைகளின் மீது அன்னாரின் அருளுக்குரிய பாதங்கள் பட்டிருந்தனவோ, அவ்வனைத்தின் மீதும் அன்பு இருந்தது. மேலும் அவர்கள் அவற்றை பரக்கத்துடையன என்றே கருதி வந்தார்கள். ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் ஒவ்வொரு விஷயமும், ஒவ்வொரு செயலும் ஹுஸுர் (அலை) மீது எந்த அளவுக்கு அன்பும், நம்பிக்கையும் இருந்தது என்பதை வெளிப்படுத்தி வந்தன. அன்னார் (அலை) அவர்களின் தோழர்கள், உண்மையாகவே அன்பு செலுத்தக்கூடிய பணியாட்கள் மற்றும் அவர்களின்

பிள்ளைகளிடமும் மிகுந்த அன்பு செலுத்தி வந்தார்கள். மேலும் அவர்களின் சின்னஞ்சிறிய விஷயங்களையும் கருத்திற் கொண்டு, ஒரு தாய் தன் குழந்தைகளைப் பராமரிப்பதைப் போன்று கவனித்து வந்தார்கள்.

இங்கு நாம் உங்களுக்கு ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் (ரலி) அவர்களால் கூறப்பட்ட ஒரு சம்பவத்தை எடுத்துரைக்கிறோம். இதனைக் கொண்டு ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் ஈமானின் உறுதி தெரிய வருகின்றது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இறைவனிடமிருந்து இறைஅறிவிப்பைப் பெற்று 'முஹம்மதீ பேகம்' குறித்த முன்னறிவிப்பு செய்த போது, ஹஸ்ரத் அம்மா ஜான் அவர்கள் தனிமையில் தொழுது அழுதழுது துஆச் செய்வதை அன்னார் (அலை) பார்த்தார்கள். பிறகு அவர்களிடம் "என்ன துஆ செய்து கொண்டிருந்தீர்கள்" எனக் கேட்டார்கள்.

அதற்கு அம்மா ஜான் (ரலி) அவர்கள் பதில் கூறினார்கள்: "இறைவா! நீ இந்த முன்னறிவிப்பை உனது அருள் மற்றும் ஆற்றலால் முழுமைப்படுத்துவாயாக!" என்று நான் கேட்டுக் கொண்டிருந்தேன். அன்னார் கூறினார்கள்: "நீங்கள் இந்த துஆவையா செய்து கொண்டிருந்தீர்கள். இதன் விளைவால் வீட்டில் (உங்கள் கணவருக்கு) இன்னொரு மனைவி வரவிருக்கின்றாள் என்பது உங்களுக்குத் தெரியுமா?" ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் உடனடியாக கூறினார்கள். "என்னவானாலும் சரி. எனக்கு என்னுடைய வேதனையைப் பற்றிய கவலை இல்லை. என்னுடைய மகிழ்ச்சி, இறைவனுடைய கூற்றும், உங்களுடைய முன்னறிவிப்பும் நிறைவேறுவதிலேயே இருக்கின்றது".

## மாற்றாந்தாய் உறவினர்களுடன் நடந்து கொண்ட முறை:

திருமணத்திற்குப் பிறகு அன்னார் காதியான் வந்த போது, அங்குள்ள எல்லா உறவினர்களும் ஹுஸுர் (அலை) அவர்களுக்கு எதிராக இருக்கக் கண்டார்கள். எந்த அளவுக்கென்றால், அங்கிருந்த சில பணியாளர்களுடனும் அன்னாரின் வீட்டார்கள் உறவைத் துண்டித்திருந்தார்கள். முதல் மனைவி நடந்து கொண்ட விதத்தின் காரணமாக, ஹுஸுர் (அலை) அவர்களுக்கு, தம் முதல் மனைவியுடன் இருந்த தொடர்பு இல்லாமைக்குச் சமமாக இருந்தது. மேலும் ஹுஸுர் (அலை) அவர்கள் ஏறக்குறைய இருபது வருடமாக தனிமையாகவே வாழ்ந்து வந்தார்கள். உறவினர்களாக இருந்த வீட்டுப் பெண்களின் நிலைமை எவ்வாறானதாக இருந்தது என்றால், எவராவது ஹுஸுர் (அலை) அவர்களுக்கு ஏதேனும் உணவுப் பொருளை அன்பளிப்பாக அனுப்பி வைப்பதையும் அவர்கள் விரும்பவில்லை. மேலும், அப்பெண்கள் உணவு, குடிநீர் ஆகியவற்றிற்கான ஏற்பாட்டை செய்வதில் தாமும் அக்கறை கொள்ளவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் மணம் முடித்து வந்தது இன்னும் விரும்பத்தகாததாக ஆனது. ஆனால் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் அனைத்தையும் மறந்து அனைவருடனும் நன்றாக நடந்து கொண்டார்கள்.

மேலும், ஹுஸுர் (அலை) அவர்களிடமிருந்து அனுமதி பெற்று அன்னாரின் முதல் மனைவி, அவரது பிள்ளைகள், (ஹுஸுர் அலைஹிஸ்ஸலாம் அவர்களின்) சகோதரரின் மனைவி போன்றோரை சந்திக்கத் துவங்கினார்கள். அவர்கள் அனைவரையும் மிகுந்த அக்கறையுடன் பராமரித்து வந்தார்கள். மேலும் தேவை ஏற்படும் போது அவர்களை கவனித்து

வந்தார்கள். மேலும் எல்லாவிதத்திலும் உதவிகள் செய்து வந்தார்கள்.

ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் தாமே இந்த சம்பவத்தைக் கூறினார்கள்: ஒருமுறை ஹஸ்ரத் மிர்ஸா சுல்தான் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்களின் தாயார் நோயுற்றபோது, அவர்களை நலம் விசாரிக்கச் சென்றேன். திரும்பி வந்து, ஹஸ்ரத் சாஹிப் அவர்களிடம், அன்னாருக்கு இன்ன வேதனை உள்ளது எனக் கூறினேன். முதலில் அன்னார் (அலை) அவர்கள் மௌனமாக இருந்தார்கள். பிறகு இரண்டாம் முறை கூறியபோது, இவ்வாறு பதிலளித்தார்கள்: ‘நான் உங்களுக்கு இரண்டு மாத்திரைகள் கொடுக்கின்றேன். இதைக் கொடுத்து வாருங்கள். ஆனால் உங்கள் சார்பாகக் கொடுங்கள். இடையில் என்னுடைய பெயர் வரவேண்டாம்’. ஹஸ்ரத் அம்மா ஜான் கூறிவந்தார்கள்: ‘இன்னும் பலமுறை ஹுஸூர் (அலை) அவர்கள், சைகையில், நான் ஹஸ்ரத் சாஹிபின் பெயர் இடையில் வராதது போல், என்சார்பாக உதவி செய்து வருமாறு என்னிடம் மறைமுகமாக கூறுவார்கள். ஆகவே நான் அவ்வாறு செய்து வந்தேன்.’

ஆயிரக்கணக்கான கதைகளை நீங்கள் கேட்டிருப்பீர்கள். அதில் ஒரு கணவனின் இரு மனைவிகள் தமக்குள் சண்டையிடுதல் மற்றும் மாற்றாந்தாய் மிகக் கடுமையாக நடந்து கொள்வதைப் பற்றி அவற்றில் கூறப்பட்டிருக்கும். ஆனால், ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் சாதாரண பெண்களைக்காட்டிலும் வேறுபட்டவர்களாக இருந்தார்கள். முதலில், அன்னார் (ரலி) அவர்கள் இயல்பிலேயே நல்லவர் –களாகவும், இறையச்சமுடையவர்களாகவும் இருந்தார்கள். தைரியம் மிக்கவர்களாக இருந்தார்கள். இரண்டாவது, ஹுஸூர் (அலை) அவர்களின் நெருக்கம் மற்றும் தர்பிய்யத்தின்

தாக்கத்தினால், (அந்த மக்களின்) பகைமை இருந்தபோதிலுங்கூட ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) ஹஸ்ரத் சாஹிபின் உறவினர்களோடும் மாற்றாந்தாயின் குழந்தைகளோடும், ஹஸ்ரத் சாஹிபின் முதல் மனைவியோடும் எப்போதுமே நல்லமுறையில் நடந்து கொண்டார்கள்.

## இறைவனின் பார்வையில் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் அந்தஸ்து:

ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் தமது தூய எண்ணங்கள் மற்றும் நற்செயல்களின் பரக்கத்தினால் இறையன்பை பெற்றிருந்தார்கள். மேலும் அன்னாரைப் பற்றி அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அதிக இல்ஹாம்களை இறக்கியிருக்கின்றான். உதாரணத்திற்கு, ஓர் இல்ஹாமில் அல்லாஹ், ஹஸ்ரத் அக்தஸ் (இமாம் மஹ்தி அலைஹிஸ்ஸலாம்) அவர்களுக்கு தமது இந்த நற்செய்தி வழங்கப்பட்ட மனைவியின் உடல்நலத்திற்காக தானே துஆ கற்றுக் கொடுத்திருக்கிறான்: رَبِّ اَصِحَّ زَوْجَتِيْ هٰذِهٖ (ரப்பி அஸிஹ்ஹ ஸவ்ஜதீ ஹாஸிஹீ). அதாவது, என் இறைவா! எனது இந்த மனைவியை நோயுற்று விடுவதிலிருந்து காப்பாயாக! மேலும் உடல்நலத்தை வழங்குவாயாக!

இந்த உறவை இறைவன் நன்றி செலுத்தத் தகுந்த ஓர் இறையருளாக ஆக்கி விட்டான். மேலும் கூறினான்: 'நீங்கள் மருமகன் ஆக இருப்பதைப் பொறுத்தவரையிலும், (மனைவியின்) குடும்பத்தைப் பொறுத்தவரையிலும் – இரண்டிலும் உங்கள் மீது கருணை காட்டியிருக்கின்ற அந்த இறைவனுக்கே எல்லாப் புகழும்.'

அன்னாரின் வயதைப் பற்றி இந்த இல்ஹாமிய துஆ கற்றுக் கொடுக்கப்பட்டது: 'என் இறைவா! என்னுடைய வயதிலும்,

என்னுடைய துணைவியாரின் வயதிலும் அசாதாரணமான அபிவிருத்தியை வழங்குவாயாக.'

மேலும் இந்த துஆ அசாதாரணமான முறையில் நிறைவேறியது. அன்னார் (அலை) மிக நீண்ட ஆயுளைப் பெற்றார்கள். உமது சந்ததிகள் மிக நீண்ட (தொடர்ச்சியான)தாகக் காண்பீர் என்று ஓர் இல்ஹாமில் குறிப்பிட்டிருப்பது போன்று, அன்னாரின் சந்ததிகளின் தொடர், ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களால் ஏற்பட இருந்ததால், அன்னார் (ரலி) அவர்களும் இந்த இல்ஹாமிற்கு மற்றொரு பொருத்தமான நபராக இருந்தார்கள். மேலும், அன்னார் (ரலி) அவர்கள் கீழ்வரும் இந்த இல்ஹாம் மிகுந்த மகத்துவத்துடன் நிறைவேறியதைக் கண்டார்கள்.

ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களுக்கு இறைவன் அவர்களுடன் இருக்கும் நற்பேறு கிடைத்திருந்தது. (இது குறித்து) ஓர் இல்ஹாம் உள்ளது. 'நான் உம்முடனும் உமது மனைவியுடனும் இருக்கின்றேன்.' அதாவது, இல்ஹாமின் அடிப்படையிலும் அன்னாருக்கு இறைநெருக்கம் கிடைத்திருந்தது. அன்னாரின் திருமணத்திற்குப் பிறகு அல்லாஹ் ஹுஸூர் (அலை) அவர்களிடம் கூறினான்: "நான் உம் மீது செய்துள்ள எனது இந்த அருளை நினைவில் வைப்பீராக! நானே உமக்காக எனது கரங்களால், எனது ரஹ்மத் (கருணை) மற்றும் குத்ரத் (ஆற்றல்) எனும் இந்த மரத்தை நட்டுள்ளேன்".

## ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் குழந்தைகள்:

அல்லாஹ் அன்னாருக்குப் பத்து குழந்தைகளை வழங்கினான். ஐந்து குழந்தைகள் சிறு வயதிலேயே மரணமடைந்து விட்டனர். மற்றும் ஐந்து குழந்தைகள் இல்ஹாமிற்கேற்ப நீண்ட வயதைப் பெற்றனர். சிறுவயதிலேயே மரணமடைந்துவிட்ட குழந்தைகளின் பெயர்கள்:

1. மூத்த மகள் சாஹிப்ஸாதீ இஸ்மத் சாஹிபா
பிறப்பு: 15 ஏப்ரல் 1886, மரணம்: ஜுலை 1891

2. பஷீரே அவ்வல் (முதல் பஷீர்) சாஹிப்
பிறப்பு: 7 ஆகஸ்ட் 1887, மரணம்: 4 நவம்பர் 1888

3. சாஹிப்ஸாதீ ஷவ்கத் சாஹிபா
பிறப்பு: 1891, மரணம்: 1892

4. சாஹிப்ஸாதா மிர்ஸா முபாரக் அஹ்மத் சாஹிப்
பிறப்பு: 14 ஜுன் 1899, மரணம்: 16 செப்டம்பர் 1907

5. சாஹிப்ஸாதீ அமத்துந் நஸீர் சாஹிபா
28 ஜனவரி 1903-ல் பிறந்தார்கள்.
3 டிசம்பர் 1903-ல் மரணமடைந்து விட்டார்கள்.

எந்தக் குழந்தைகளுக்கு அல்லாஹ் நீண்ட வாழ்வை வழங்கினானோ, மேலும் அவர்களின் சந்ததிகளை தொடரச் செய்தானோ, அவர்களைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், ‘இந்த ஐந்து குழந்தைகளும் ஸய்யிதாவின் சந்ததியினர் ஆவர்’ என்று கூறியுள்ளார்கள்.

இவர்கள் அனைவரும் நற்செய்தி அளிக்கப்பட்ட குழந்தைகள் ஆவர். இவர்களின் சுருக்கமான அறிமுகம் இதுவாகும்:

1. <u>ஹஸ்ரத் சாஹிப்ஸாதா மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது சாஹிப்</u>

   12 ஜனவரி 1889-ல் பிறந்தார்கள். அன்னார் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இரண்டாவது இமாமாக ஆனார்கள். அன்னாரைப் பற்றி ‘ஃபஸ்லே உமர்’ மற்றும் ‘முஸ்லிஹ் மவ்வூத்’ போன்ற இல்ஹாம்கள் இறங்கின. நீண்ட காலம் மார்க்கத் தொண்டாற்றிய பிறகு 7 மற்றும் 8 நவம்பரின் இடைப்பட்ட இரவில் 1965-ஆம் ஆண்டு மரணமடைந்தார்கள்.

2. <u>ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் M.A.</u>

20 ஏப்ரல் 1893-ல் பிறந்தார்கள். நீண்ட வயதைப் பெற்ற பிறகு செப்டம்பர் 1963-ல் மரணமடைந்தார்கள். அன்னார் முழு வாழ்க்கையையும் ஜமாஅத்தின் தொண்டில் கழித்தார்கள்.

3. <u>ஹஸ்ரத் மிர்ஸா ஷரீஃப் அஹ்மது சாஹிப்</u>

இவர்கள் 24 மே 1895-ல் பிறந்தார்கள். இவர்களைப் பற்றி ‘அந்த அரசர் வந்தார்’ என்ற ஓர் இல்ஹாம் உள்ளது. இவர்களும் நீண்ட வயதைப் பெற்றார்கள். மேலும், ஜமாஅத்தின் தொண்டில் ஈடுபட்டிருந்தார்கள். இவர்களின் மரணம் டிசம்பர், 1961-ல் நிகழ்ந்தது.

4. <u>ஹஸ்ரத் நவாப் முபாரகா பேகம் சாஹிபா</u>

இவர்கள் 2 மார்ச் 1897-ல் பிறந்தார்கள். இவர்களைப் பற்றி ‘நவாப் முபாரகா பேகம்’ என்றொரு பிரபலமான இல்ஹாம் உள்ளது. இவர்கள் அதிகமாக துஆச் செய்யக் கூடியவர்களாகவும், ஞானமிக்கவராகவும், பொறுமை-யுடையவராகவும், நன்றி செலுத்தும் பெண்மணியாகவும் இருந்தார்கள். மார்க்கத் தொண்டில் ஈடுபட்டிருந்தார்கள். அன்னாரின் வஃபாத் 23 மே 1977-ல் நிகழ்ந்தது.

5. <u>ஹஸ்ரத் சாஹிப்ஸாதீ அமத்துல் ஹஃபீஸ் பேகம் சாஹிபா</u>

ஜூன் 25, 1904-ல் பிறந்தார்கள். அன்னாரைப் பற்றி “துக்தே கிராம்” (அதாவது, மதிப்பிற்குரிய மகள்) என்றொரு பிரபலமான இல்ஹாம் உள்ளது. அன்னாரின் வஃபாத் 6 மே 1987-ல் நிகழ்ந்தது.

ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் இந்த ஐந்து குழந்தைகளுக்கும் அல்லாஹ் நீண்ட ஆயுளை வழங்கினான்.

இவர்கள் அனைவருக்கும் சந்ததிகளையும் வழங்கினான். மேலும் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் தமது நீண்ட தலைமுறையையும் கண்டார்கள். அதாவது, தமது கொள்ளுப் பேரர்களையும், கொள்ளுப் பேத்திகளையும் கண்டார்கள். எந்த அளவிற்கு என்றால், அன்னாரின் மரணம் நிகழ்ந்த போது உயிருடனிருந்த அன்னாரின் தலைமுறையினரின் எண்ணிக்கை 111-ஆக இருந்தது. 20 பேர் மரணத்திருந்தனர். அதாவது மொத்த சந்ததிகள் 131 பேர் ஆவார்கள். இது ஒருவருக்குத் தம் வாழ்க்கையில் தமது கண்களால் பார்க்கும் நற்பேறு பெற்ற மிகவும் அசாதாரணமான எண்ணிக்கையாகும்.

அன்னாருக்கு அல்லாஹ் மாபெரும் கண்ணியத்தை வழங்கியுள்ளான். அன்னாரின் கணவர் இறைவனால் அனுப்பப்பட்டவர் ஆவார். இறைவன் அன்னாரின் மூத்த மகனுக்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் 'தலைமை பொறுப்பை' வழங்கியுள்ளான். மேலும் "முஸ்லிஹ் மவ்வூத்" என்ற பட்டத்தையும் வழங்கியுள்ளான். 1944-ஆம் ஆண்டு ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது சாஹிப் அவர்கள் (தம்மை) முஸ்லிஹ் மவ்வூத் என்று வாதிட்டபோது ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் நன்றியை வெளிப்படுத்தும் வகையில் இவ்வாறு எழுதினார்கள்:

"நான் எனது இறைவனுக்கு எவ்வாறு நன்றி செலுத்துவேன்? அவன் என்னைப் போன்ற எளியவளைத் தனது தூய மற்றும் மேன்மைக்குரிய மஸீஹ் (அலை) அவர்களின் மனைவியாக தேர்ந்தெடுத்தான். மேலும் எனது தலையை, அவன் தனது எல்லையற்ற அருளின் கிரீடத்தால் அழகுபடுத்தினான். நான் எனது இறைவனுக்கு எவ்வாறு நன்றி செலுத்துவேன்? அவன் எனது மகன் மஹ்மூதை முஸ்லிஹ்

மவ்வூத் என்ற அந்தஸ்தில் நிறுத்தி, எனது வயதின் இறுதிக் காலத்தில் எனக்கு மற்றொரு மகுடத்தை வழங்கினான். ஆக, எனக்கு எனது மேல்புறத்திலிருந்தும் கிரீடம் கிடைத்தது. கீழ்புறத்திலிருந்தும் கிடைத்தது. மேலும் இது, எனது இறைவனின் அருள் மற்றும் கருணையே ஆகும். இதில் எனது, எந்த ஆசைக்கோ, எந்தச் செயலிற்கோ, எந்த உரிமைக்கோ அணுவளவிற்குக்கூட தொடர்பில்லை. மேலும் இவ்விரு கிரீடத்திலும் எனக்கு மட்டும் பங்கு இல்லை. மாறாக, எனது அன்பிற்குரிய ஜமாஅத்தும் இதில் என்னோடு சரிசமமான பங்கு வகிக்கிறது.

ஆனால், இறைவனின் ஒவ்வொரு சிறப்பான, பொதுவான அருளும், தன்னோடு சிறப்பான பொறுப்புகளையும் உடன் கொண்டு வருகின்றது. மேலும் இது எனது துஆவாகும்: 'இறைவன் எனக்கும் ஜமாஅத்திற்கும் அவன் நம்மீது சுமத்தியுள்ள, இவ்வனைத்து முக்கியமான பொறுப்புகளையும் நிறைவேற்றும் வாய்ப்பை வழங்குவானாக! எங்கள் இறைவா! அவ்வாறே செய்வாயாக! ஆமீன். வஸ்ஸலாம்.

உம்மே மஹ்மூத் (மஹ்மூதின் தாயார்)

5 ஏப்ரல் 1944

(அல்ஃபுர்கான், முஸ்லிஹ் மவ்வூது சிறப்பிதழ், 1 ஏப்ரல் 1944, பக்கம் 3)

* * * * * * * *

அல்லாஹ் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வஃபாத்திற்கு பிறகு இன்னுமோர் அருளை வழங்கினான். அவர் அன்னாரின் பேரராவார். அவரைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு, نَافِلَةً لَّكَ ‘‘நாஃபிலத்தல்லக்’’ என்ற இல்ஹாம் இறங்கியது. (அதாவது, இது உமக்கு நஃபிலைப் போன்றது ஆகும்) அவரை அன்னார் (ரலி) அவர்கள் தமது மகனைப் போல் பாவித்து தாமே வளர்த்தார்கள். மேலும் தமது கரங்களால் மார்க்கப் பயிற்சி வழங்கினார்கள். அல்லாஹ் அவரையும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மூன்றாவது இமாமாக ஆக்கினான். அதாவது, ஹஸ்ரத் மிர்ஸா நாஸிர் அஹ்மது ரஹிமஹுல்லாஹு தஆலா அவர்கள். அடுத்து அன்னாரின் வஃபாத்திற்குப் பிறகு, ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் இன்னொரு பேரர், அதாவது, ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மத் ரஹிமஹுல்லாஹு தஆலா அவர்களை ஜமாஅத்தின் நான்காவது இமாமாக நியமித்தான். [தற்போது அல்லாஹ் அவர்களின் கொள்ளுப் பேரரும், ஹஸ்ரத் மிர்ஸா ஷரீஃப் அஹ்மது (ரலி) அவர்களின் பேரருமாகிய ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்களை ஐந்தாவது இமாமாக நியமித்திருக்கிறான்.]

# பாகம் இரண்டு

## வாழ்வும், நல்லொழுக்கமும்:

ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களை, அல்லாஹ் தன்னால் அனுப்பப்பட்டவருக்கு (துணைவியராக) ஏன் தேர்ந்தெடுத்தான்? இந்த விஷயம் அன்னாரின் வாழ்க்கையை கொஞ்சம் கவனித்தாலே தெரிந்து விடும். ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றில் தெளிவான விஷயம், அவர்களுடைய இறைவணக்கமாகும். அவர்கள் ஐவேளை தொழுகைகளை முறையாகவும், தொடர்ச்சியாகவும், மிக கவனமாகவும், அழகாகவும் தொழுது வந்தார்கள். கடமையான தொழுகைகளை மட்டுமல்லாமல் தஹஜ்ஜுத் தொழுகை மற்றும் லுஹா தொழுகைகளையும் கடைபிடித்து வந்தார்கள். நஃபில் தொழுகைகள் மட்டுமின்றி சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் அவர்கள் மனநிம்மதியைத் தொழுகையைக் கொண்டே பெற்று வந்தார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறி வந்தார்கள்: “என் கண்களின் குளிர்ச்சி தொழுகையிலேயே இருக்கின்றது” என்ற ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அன்புமிகு கூற்று, ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களுக்கும் வாரிசுரிமையாக கிடைத்திருந்தது.

தொழுகைகள் மட்டுமின்றி எல்லா நேரமும் எழும்போதும், உட்காரும்போதும், நடக்கும்போதும், உலாவும்போதும் உரத்த குரலில் துஆக்கள் செய்து வந்தார்கள். சில நேரம், உட்கார்ந்திருந்தவாறே திடீரென்று ‘யா அல்லாஹ்’ என்று சத்தமாகக் கூறுவார்கள். பிறகு துஆச் செய்யத் துவங்கிவிடுவார்கள். மேலும் (துஆவில்) எந்த அளவுக்கு துடிப்பு

இருக்குமென்றால் அருகில் அமர்ந்திருப்பவரும் தானாகவே துஆவில் சேர்ந்து கொள்வார்.

ஹஸ்ரத் நவாப் முபாரகா பேகம் சாஹிபா கூறிவந்தார்கள்: எந்த அளவிற்கு நிம்மதியின்றி அன்னாரின் உதட்டிலிருந்து துஆ வெளிவரும் என்றால், மூச்சு திணறி நின்றுவிட்ட சுவாசம் மீண்டும் செல்வதுபோல் இருக்கும். சில வேளைகளில் கவிதை வரியாகவோ அல்லது கவிதை வடிவிலோ துஆச் செய்து வந்தார்கள். ஒருமுறை, லாஹூரில் யாருமற்ற ஒரு பள்ளிவாசலை பார்த்துவிட்டு, அந்தோ என்றவாறு கூறினார்கள்:

“இறைவா! பள்ளிவாயில்கள் மக்களால் நிறைந்திருக்க வேண்டும்;

தேவாலயங்கள் வீழ்ந்திட வேண்டும்.”

ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களுடைய துஆவில் முழு ஜமாஅத்தும் அடங்கியிருக்கும். அனைவருக்காகவும் துஆச் செய்வார்கள். பலருடைய பெயரைச் சொல்லி, மிகவும் உருக்கமாக துஆச் செய்வார்கள். ஒருமுறை, படுத்திருந்தவாறு யா அல்லாஹ்! எனக் கூறினார்கள். அதனைக் கேட்ட நான் பதற்றமடைந்து விட்டேன். ஆனால் அதன் பிறகு, என் நய்யருக்கு மகனை வழங்குவாயாக என்ற சொற்றொடரைக் கூறினார்கள். நய்யர் என்பவர் ஆஃப்ரிக்காவின் முதல் முரப்பி (கொள்கைப் பரப்புநர்) ஆவார். ஹஸ்ரத் மவ்லானா அப்துர் ரஹீம் சாஹிப் நய்யர் ஆவார். இறைவன் அன்னாருடைய நய்யருக்கு இரண்டு மகன்களை வழங்கினான். அன்னார் (ரலி) அவர்கள் சரியான பொருளில் முழு ஜமாஅத்தின் தாயாக விளங்கினார்கள்.

ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள், தாம் தொழுகையைக் கடைபிடித்து வந்தது மட்டுமல்லாமல், மற்றவர்களையும் வலியுறுத்தி வந்தார்கள். ஏதேனும் ஒரு

சிறப்பிற்குரிய விஷயமென்றால், அது தம்மைப் பற்றியதாக இருந்தாலும், வேறு ஒருவருக்காக இருந்தாலும், அனைவரிடமும் துஆச் செய்யும்படி கூறுவார்கள். குறிப்பாக, குழந்தைகளிடம் கூறி கண்டிப்பாக அவர்களை துஆச் செய்ய வைப்பார்கள். “குழந்தைகள் பாவமற்றவர்களாக இருக்கின்றனர். எனவே இறைவன் குழந்தைகளின் துஆவை அதிகமாகக் கேட்கின்றான்” எனவும் கூறி வந்தார்கள்.

கான் பஹாதுர் சௌத்ரி அபுல் ஹாஷிம் கான் சாஹிபின் மனைவி ஒரு சம்பவத்தைக் கூறினார்: ஒருமுறை, அவர் தமது மூத்த மகளின் பிறப்பிற்குப் பிறகு, ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களிடம் துஆவிற்காக விண்ணப்பிக்கச் சென்றிருந்தார்கள். தொழுகைக்கான நேரம் ஆகிவிட்டது. பிறகு அம்மா ஜான் (ரலி) அவர்கள் தொழுது முடித்து திரும்பி வருகையில் அங்குள்ள பெண்களிடம், பெண்களே! ‘நீங்கள் தொழுது விட்டீர்களா?’ எனக் கேட்டார்கள். அவர்கள் கூறினார்கள்: குழந்தைகள் சிறுநீர் கழித்துள்ளனர். வீட்டிற்குச் சென்று தொழுவோம்.

இதைக் கேட்டுவிட்டு ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) கூறினார்கள்:

குழந்தைகளை சாக்குபோக்காகக் காட்டி தொழுகையை வீணாக்காதீர்கள். இவ்வாறு குழந்தைகள் இறைவனின் கோபத்திற்குக் காரணியாக அமைகின்றனர். (ஆனால்) குழந்தையோ இறைவனின் அருள் ஆகும்.

ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள், ‘துஆ வீண் போவதில்லை. ஒருவேளை ஒரு விதத்தில் ஏற்றுக் கொள்ளப்படவில்லையெனில், மற்றொரு விதத்தில் ஏற்றுக் கொள்ளப்படும் அல்லது இபாதத்தில் (இறைவணக்கத்தில்) சேர்த்துக் கொள்ளப்படும்’ என்று அடிக்கடி கூறுவார்கள்.

காதியானில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வீட்டில் சிறியதோர் அறை உண்டு. அதை 'பைத்துத் துஆ' என்று அழைப்பார்கள். இது, ஹுஸூர் (அலை) மற்றும் அம்மா ஜான் (ரலி) அவர்களின் அறையுடன் கட்டப்பட்டுள்ளது. மேலும் அவர்களின் அறையிலிருந்தே அந்த அறைக்கு பாதை செல்கிறது. ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் அதன் கதவுகளிலிருந்து நுழைவாயில் வரை ஒரு கயிற்றை கட்டி, அதில் திரை தொங்கவிட்டிருந்தார்கள். மேலும் அந்த திரைக்குப் பின்னால் தமது கட்டிலைப் போட்டிருந்தார்கள். பைத்துத் துஆவிற்கு வந்து செல்பவர்களுக்குத் தடை ஏதுமின்றியும், திரையின்மையோ அல்லது சங்கடமோ ஏற்படாதிருக்கும் என்பதற்காக அவ்வாறு செய்தார்கள்.

ஜமாஅத் மக்களில் எவர் பைத்துத் துஆ செல்ல விரும்பினாலும் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் மிக்க மகிழ்ச்சியுடன் இதற்கான அனுமதி வழங்கி வந்தார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த அறையில் நஃபில் தொழுதும், துஆக்கள் செய்தும் வந்தார்கள். இதன் காரணமாகவே, இதன் பெயர் பைத்துத் துஆ (துஆ செய்வதற்கான இல்லம்) என்று வைக்கப்பட்டது.

ஒருமுறை ஒரு பெண்மணி வந்தார். மேலும் பைத்துத் துஆவில் தொழுவதற்கான அனுமதி கேட்டார். அம்மா ஜான் (ரலி) அவர்கள் புன்னகைத்தவாறு கூறினார்கள்:

"நாங்கள் 'Tax' (வரி) எதுவும் நிர்ணயிக்கவில்லை". பிறகு அந்தப் பெண்மணி அறையில் நுழைந்தபோது கூறினார்கள்:

ஆம். ஒரு 'Tax' (வரி) இருக்கின்றது. எனக்காக துஆச் செய்யுங்கள்.

ஒருமுறை, மஹாஷா முஹம்மது உமர் சாஹிப் (கொள்கை பரப்புநர்) மௌலவி ஃபாஸில்–க்கான, தேர்வு எழுதச் செல்வதற்கு முன் பைத்துத் துஆவில் துஆச் செய்வதற்காக வந்தார்கள். ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களிடம் அனுமதி கேட்டார்கள். அன்னார் (ரலி) அவர்கள், எட்டு மற்றும் ஒன்பது மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் வாருங்கள் என்றார்கள். மௌலவி சாஹிப் கூறுகின்றார்கள்: நான் குறித்த நேரத்தில் ஆஜரானேன். கதவைத் தட்டினேன். ஒரு பணிப்பெண் வந்தாள். (அவள்) கேட்டதற்கு, நான் அவளிடம், ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் அனுமதியோடு பைத்துத் துஆவில் துஆவிற்காக ஆஜராகியுள்ளேன் எனக் கூறினேன்.

பணிப்பெண் கூறினாள்: சில பெண்களை, ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் அங்கு விருந்திற்காக அழைத்துள்ளார்கள். தாங்கள் நாளை காலையில் வாருங்கள். நான் (மௌலவி சாஹிப்) கூறினேன்: நான் இன்றைய தினமே தேர்வுக்காக செல்கிறேன் என ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களிடம் கூறுங்கள் என்றேன். இதைக் கேட்டுவிட்டு அந்தப் பணிப்பெண் உள்ளே சென்று விட்டாள். பிறகு திரும்பி வரவில்லை. இறுதியில், கதவை தட்டியபோது மாயீ காகூ சாஹிபா வெளியே வந்தார்கள். நான் எல்லா விஷயத்தையும் அவர்களிடம் கூறினேன். என் பேச்சைக் கேட்டு விட்டு அவர்கள் உள்ளே சென்று விட்டார்கள். பிறகு சற்று நேரத்திலேயே திரும்பி வந்து கூறினார்கள்: ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் கூறியுள்ளார்கள்: நாங்கள் விருந்தின் நேரத்தை 9:30 மணியாக மாற்றிவிட்டோம். தாங்கள் தற்போது துஆவிற்காக உள்ளே செல்லலாம்.

இவ்வாறு ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் ஒவ்வொருவரின் விருப்பத்தையும் நிறைவேற்றி வந்தார்கள். அவர்கள் அடிக்கடி இந்த துஆக்களை உரத்த குரலில் ஓதி வந்தார்கள்.

سُبْحٰنَ اللّٰهِ وَبِحَمْدِهٖ سُبْحٰنَ اللّٰهِ الْعَظِيْمِ ۔ يَا حَيُّ يَا قَيُّوْمُ
بِرَحْمَتِكَ اَسْتَغِيْثُ يَا رَبِّيْ وَرَبَّ السَّمٰوٰتِ وَالْاَرْضِ

பொருள்: அல்லாஹ் தன் புகழுடன் தூய்மையானவன். மகத்துவமிக்க அல்லாஹ் தூய்மையானவன். என் இறைவா! வானங்கள் மற்றும் பூமியின் இறைவா! உயிருடனிருப்பவனே! நிலைத்திருப்பவனே! நான் உன் கருணையைக் கொண்டு உதவி கேட்கிறேன்.

காதியானிலிருந்து ஹிஜ்ரத் செய்து வந்தபோது, அவர்கள் இந்த துஆவையும் அதிகமாக செய்து வந்தார்கள்.

يَا حَفِيْظُ يَا عَزِيْزُ يَا رَفِيْقُ ۔ رَبِّ كُلُّ شَيْءٍ خَادِمُكَ
رَبِّ فَاحْفَظْنَا وَانْصُرْنَا وَارْحَمْنَا ۔

பொருள்: பாதுகாப்பாளனே! வல்லமைமிக்கவனே! தோழனே! இறைவா! அனைத்தும் உனக்கு தொண்டாற்றக் கூடியதே. ஆகவே இறைவா! எங்களைப் பாதுகாப்பாயாக. மேலும் எங்களுக்கு உதவி செய்வாயாக. மேலும் எங்கள் மீது கருணை காட்டுவாயாக.

குழந்தைகளான எங்களுக்கும் மேற்கண்ட துஆவை கற்றுக் கொடுத்திருந்தார்கள். இந்த துஆவை அதிகமாக செய்து வாருங்கள். இது இக்காலத்திற்கான மகத்தான பண்புப் பெயராக இருக்கின்றது. அதாவது, மாபெரும் துஆவாகும் என்றும் கூறி வந்தார்கள். அன்னார் (ரலி) அவர்கள் எப்பொழுது பயணம்

செய்தாலும் இந்த (பின்வரும்) துஆவை கண்டிப்பாக செய்து வந்தார்கள்:

بِسۡمِ اللّٰهِ مَجۡرٖهَا وَمُرۡسٰهَا

(பிஸ்மில்லாஹி மஜ்ரீஹா வ முர்ஸாஹா)

பொருள்: அல்லாஹ்வின் பெயரால் (பயணத்தைத்) துவக்குகிறேன். (இந்த வாகனம்) நகர்வதும், நிற்பதும் அல்லாஹ்வின் பெயரைக் கொண்டே ஆகும்.

இறைவன், அவனது வேதம் மற்றும் அவனது ரஸூல் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் மீது ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களுக்கு மிகுந்த அன்பு இருந்தது. அவர்கள் நாள்தோறும் திருக்குர்ஆனை ஓதி வந்தார்கள். அதிகமானோர் கூறுவது என்னவென்றால், தமக்கு ஏதேனும் துன்பம் ஏற்பட்டாலோ அல்லது ஹுஸூர் (அலை) அவர்களின் நினைவு வந்தாலோ அம்மா ஜான் (ரலி) அவர்கள் திருக்குர்ஆன் ஓதத் துவங்கி விடுவார்கள். தமது மன நிம்மதியைத் திருக்குர்ஆனில் தேடியும் பெற்றும் வந்தார்கள். ஏதாவதொரு கடினமான நேரம் ஏற்பட்டால், யாஸீன் சூராவின் திலாவத்தை துவங்கி விடுவார்கள். மேலும், “ஏன் தான் மக்கள் இவ்வளவு அழகிய சூராவை மரணத்தின்போது மட்டும் நிர்ணயித்துக் கொண்டு விட்டனரோ? ஆனால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களோ வேதனையின் போது சூரா யாஸீன் ஓதினால், துன்பம் நீங்கி விடும் என்று கூறி வந்தார்கள்” என்று ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் கூறி வந்தார்கள்.

ஹதீஸ்களைக் கேட்பதற்கு அவர்களுக்கு அளவுகடந்த ஆர்வம் இருந்து வந்தது. தினசரி, தமது குடும்பத்திலுள்ள ஏதாவதொரு சிறுவனை அழைத்து ஹதீஸ் கேட்டு வந்தார்கள். சில நேரங்களில் தம்மால் வளர்க்கப்பட்ட அனாதைச் சிறுமிகளில் ஒருவரை அருகில் அமர்த்தி ஹதீஸைப் படிக்கச் சொல்லி கேட்டு

வந்தார்கள். மரணம் நெருங்கிய போது நோயில் இந்த ஆர்வம் எந்த அளவு அதிகரித்ததென்றால், வாசிப்பவர் களைப்படைந்து விடுவார். ஆனால், ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் (ஹதீஸ் கேட்பதற்கான) தாகம் தணியாமல் இருந்தது.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சுன்னத்திற்–(நடைமுறைக்)கேற்ப முழுமையான முறையில் செயல்படுவதற்கு முயற்சி செய்து வந்தார்கள். ஒருமுறை ஒருவர் தோட்டத்தின் பழத்தில், மாம்பழம் இன்னும் பூவாகவே இருந்தபோது, 600 ரூபாயில் வாங்குவதற்காக முன்ஷீ சாஹிபின் மூலமாக சொல்லி அனுப்பியிருந்தார். ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள், இது ஆகுமானதல்ல என்று பதிலளித்து மறுத்து விட்டார்கள். தோட்டத்தில் காய் பிடித்தவுடன், அது மிகக் குறைவான விலையில் விற்றது. அந்த நபர் முன்ஷீ சாஹிபிடம் கூறினார்: அறுநூறு ரூபாய் வாங்கியிருந்தால் நன்றாக இருந்திருக்குமே! இப்போது பாருங்கள், எவ்வளவு குறைந்த தொகை கிடைத்துள்ளது.

இதைக் கேட்டுவிட்டு முன்ஷீ சாஹிப் அவர்கள் அவருக்கு பதிலளித்தார்கள்: 'அம்மா ஜான் (ரலி) அவர்கள் இதை ஆகுமானதல்ல எனக் கருதும்போது அப்படிப்பட்ட பணத்தை எவ்வாறு பெற்றுக் கொள்வேன்?'

கைதிகளுக்கு உணவளிப்பதும் சுன்னத் ஆகும். ஆகவே, ஒருமுறை ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) பட்டாலா சென்றபோது, அன்னார் (ரலி) அவர்கள் டாக்டர் ஹஷ்மத்துல்லாஹ் கான் சாஹிபிடம் கூறினார்கள்: "இங்கு கைதிகளுக்கு நம் சார்பாக சிறந்த உணவுகள் வழங்க அனுமதி கிடைக்குமா என விசாரித்துப் பாருங்கள்." அவர்கள் தமக்குத் தெரிந்த ஒரு நபர் மூலமாக அனுமதி பெற்றார்கள். மேலும் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் உணவு தயார் செய்வதற்காக, 50 ரூபாய் அவர்களுக்கு வழங்கினார்கள். மேலும் இவ்வாறாக கைதிகளுக்கு

சிறந்த உணவு வழங்கப்பட்டது. (அநேகமாக இந்தக் கைதிகள், கடன் காரணமாக சிறையில் அடைக்கப்பட்டவர்கள் ஆவார்கள்.)

## இரண்டாவது வல்லமையுடன் ஆழமான தொடர்பு:

ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களுக்கு இரண்டாவது வல்லமை மீது உளப்பூர்வமான ஈமான் இருந்தது. காலத்தின் இமாமிற்குக் கட்டுப்படுவதையும், அவருடைய ஒவ்வொரு கட்டளையை ஏற்று நடப்பதையும் தமது கடமையெனக் கருதி வந்தார்கள். இரண்டாவது வல்லமையின் முதல் வெளிப்பாடான (ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ்) மவ்லானா நூருத்தீன் சாஹிப் (ரலி) அவர்கள் இந்த விஷயத்திற்கு சாட்சியம் அளித்தவாறு, "எனக்கு எத்தகைய கட்டுப்படுதலை மியான் மஹ்மூது மற்றும் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் வெளிப்படுத்தினார்களோ அந்த அளவுக்கு வேறு எவருமே வெளிப்படுத்தவில்லை என்று கூறியுள்ளார்கள்.

ஒருமுறை முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் எனது சூழ்நிலையை தெரிந்தவர்கள். ஒருமுறை கொஞ்சம் தொகை எனக்குக் கொடுத்து விட்டு கூறினார்கள்: இது தங்களது உணவிற்காக ஆகும். மேலும் கொஞ்சம் தொகையை லங்கர் கானாவிற்காக (விருந்தினர் இல்லத்திற்காக) கொடுத்து விட்டு கூறினார்கள்: 'ஆனால், நான் தங்களுக்கு கொடுத்ததிலிருந்து (லங்கர் கானாவிற்கு) வழங்க வேண்டாம்.'

அன்னார் (ரலி) அவர்களுக்கு காலத்தின் இமாமின் மீது எந்த அளவிற்கு அன்பு இருந்தது என இந்தச் சம்பவத்திலிருந்து தெரிகின்றது. ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் மவ்லானா நூருத்தீன் (ரலி) அவர்கள், அன்னாருக்கு எந்த வேலையைக்

கூறுவார்களோ அன்னார் (ரலியல்லாஹு அன்ஹா) அதை தாமே செய்து முடித்து விடுவார்கள். ஒருமுறை ஒரு சம்பவம் நிகழ்ந்தது. ஹுஸூர் (ரலி) அவர்களிடம் சில குழந்தைகள் படிப்பதற்காக வந்திருந்தனர். அவர்களில் ஒரு கிராமத்து பையனும் இருந்தான். ஒருநாள் அவன் உணவு உண்ணும்போது அழுது விட்டான். அவனுக்கு லஸ்ஸி பருகுவதற்கான பழக்கம் இருந்து வந்ததாகவும், அது கிடைக்காமற் போனதே அழுகைக்குரிய காரணம் என்றும், கேட்டதில் தெரிய வந்தது. ஹுஸூர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களிடம் “இப்படியொரு சம்பவம் நிகழ்ந்துள்ளது. தாங்கள் தங்களது வீட்டிலிருந்து லஸ்ஸி அனுப்பித் தாருங்கள்” எனக் கூறினார்கள். இதன் காரணமாக, அன்னார் (ரலி) அவர்கள் தினசரி அந்த மாணவனுக்கு லஸ்ஸி அனுப்பி வந்தார்கள்.

ஒருமுறை சில போர்வைகளை சரிசெய்ய வேண்டியதிருந்தது. ஹுஸூர் (ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ்) அவர்கள் அமிர்தசரஸைச் சேர்ந்த சூஃபி குலாம் முஹம்மத் சாஹிப் அவர்களிடம் “இவற்றை ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களுக்கு அனுப்பி வையுங்கள்” எனக் கூறினார்கள். இதைக் கேட்டுவிட்டு, ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களிடம் இப்படிப்பட்ட வேலைகள் வாங்கப்படுகின்றன என அன்னாருக்கு மிகுந்த மன வருத்தம் ஏற்பட்டது. அன்னாரின் முகம் மாறியதைக் கண்டவுடன் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் புரிந்து கொண்டார்கள். உடனே கூறினார்கள்: “நான் அவர்களுக்கு (அவ்வப்போது) வேலை சொல்லும்படி அன்னார் (ரலியல்லாஹு அன்ஹா) என்னிடம் கூறியுள்ளார்கள்.” ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் தமது கைகளாலேயே போர்வைகளை சரி செய்து அனுப்பினார்கள்.

ஒருமுறை ஹுஸுர் (முதல் கலீஃபத்துல் மஸீஹ்) அவர்கள் அன்னாரிடம் (அம்மா ஜான் ரலியல்லாஹு அன்ஹா அவர்களிடம்) இவ்வாறு ஆலோசனை வழங்கினார்கள்:

“தாங்கள் தங்களுடைய அஹ்மதி அல்லாத சொந்தக்கார பெண்களிடம் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். பிறகு, தாங்கள் முதலில் அவர்களுடைய வீட்டிற்குச் செல்லுங்கள். அடுத்து அவர்களை (தங்களுடைய வீட்டிற்கு) அழைத்துக் கொள்ளுங்கள்.” ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் தமது இமாமின் கட்டளையை அப்படியே ஏற்றார்கள். அந்தப் பெண்மணிகளை சந்திக்கத் துவங்கினார்கள். இதன் காரணமாக இறையருளால் அவர்களது உறவினர்களுள் பல பெண்கள் அஹ்மதிகளானார்கள்.

ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் நடைமுறை என்னவெனில், அன்னார் எப்பொழுது வேறொரு ஊருக்கு செல்ல வேண்டியது வந்தாலும், ஹுஸுர் (முதல் கலீஃபத்துல் மஸீஹ்) அவர்களிடம் அனுமதி பெற்றுச் செல்வார்கள். மேலும் அவ்வாறே ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் காலத்திலும் நடைபெற்று வந்தது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் அன்னாரின் மகனாக இருந்தபோதிலுங்கூட, அவர்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் ஆன பிறகு, ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் அன்னாரிடம் எவ்வாறு ஒரு காலத்தின் இமாமிற்கு கண்ணியமும், கட்டுப்படுதலையும் மேற்கொள்ள வேண்டுமோ அவ்வாறே மேற்கொண்டார்கள்.

## ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் பொருள் தியாகங்கள்:

ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்காக மாபெரும் பொருள் தியாகங்களை செய்திருக்கிறார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மினாரத்துல் மஸீஹ் கட்டுவதற்கான திட்டத்தை அறிவித்து நூற்றி ஒரு தொண்டர்களிடம் நீங்கள் எல்லாரும் தலா நூறு ரூபாய் வழங்க வேண்டும் என்று கூறினார்கள். ஆனால், ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் ஆயிரம் ரூபாய் வாக்குறுதி எழுதினார்கள். மேலும் தில்லியிலிருந்த தமது ஒரு வீட்டை விற்று இந்தத் தொகையை செலுத்தினார்கள்.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தஹ்ரீகே ஜதீது சந்தா திட்டத்தை ஆரம்பித்தபோது, மேலும் சந்தாவிற்கான அறிவிப்பைச் செய்தபோது, ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் அதிலும் முந்திக் கொண்டு பங்கேற்றார்கள். மேலும் முதல் பதிவேட்டில் வஃபாத்திற்கு முன்வரை 3142 ரூபாய் சந்தா செலுத்தி இருந்தார்கள். இது மட்டுமின்றி, வேறு எந்த சந்தா திட்டத்தை எடுத்து வைத்தாலும் அதில் அவர்கள் கண்டிப்பாக பங்கேற்று, பெருந்தொகையை அளித்துவிடுவார்கள். உதாரணத்திற்கு ஜமாஅத்தின் பைத்துஸ் ஸிக்ர், மிஷன் ஹவுஸ், லங்கர் கானா, லஜ்னா இமாயில்லாஹ் அலுவலகம், லண்டன் மற்றும் பெர்லினிலுள்ள பைத்துஸ் ஸிக்ர் போன்றவையாகும். லங்கர் கானாவிற்கு அண்டாக்கள் வழங்குவது, அல்ஃபஸ்ல் பத்திரிக்கைக்குப் பொருளுதவி செய்வது போன்ற எதுவாக இருப்பினும் அது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் என்றாலும் அல்லது அன்னாருக்குப் பிறகு என்றாலும் அதில்

ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் முந்திக் கொண்டு பங்கேற்காமல் இருந்ததேயில்லை.

## குழந்தைகளுக்கு தர்பிய்யத்:

குழந்தைகளுக்கு தர்பிய்யத் செய்வது தொடர்பாக ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் முன்மாதிரி, சிறந்ததாகவும் ஈடிணையற்றதாகவும் இருந்துள்ளது. இது குறித்து ஹஸ்ரத் நவாப் முபாரக்கா பேகம் சாஹிபா அவர்கள் தமது அனுபவங்களை இவ்வாறு குறிப்பிடுகிறார்கள்:

“தர்பிய்யத்தின் கோட்பாடுகள் குறித்து, நான் பலரை கவனமாகப் பார்த்துள்ளேன். எனினும் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களைக் காட்டிலும் சிறந்தவராக எவரையும் கண்டதில்லை. பள்ளிக்கூடம், கல்லூரியில் கல்வி கற்கவில்லை. வீட்டிலேயே சாதாரணமான உர்து எழுதப் படிக்கக் கற்றார்கள். இருப்பினும், நல்லொழுக்கம் மற்றும் தர்பிய்யத் சம்பந்தமாக ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் எந்த கொள்கையை மேற்கொண்டார்களோ அதைப் பார்த்து, இது இறையருளும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தர்பிய்யத்தின் விளைவாகும் என்றே கூற இயலும். மேலும் இது தவிர மற்ற விஷயங்களை எல்லாம் எங்கிருந்து கற்றார்கள், யாரிடமிருந்து கற்றார்கள் என்று கூற இயலாது.

குழந்தைகளின் தர்பிய்யத்திற்கான முதலாவது கொள்கை என்னவென்றால், குழந்தையிடம் முழுமையான நம்பிக்கையை வெளிப்படுத்தி பெற்றோரின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக செயல்பட வைத்தல், பொய்யின் மீது வெறுப்பு, தன்மானம் காட்டுதல், பணம், காசு மற்றும் உலக விஷயங்களைப் பொருட்படுத்தாதிருத்தல் ஆகியவை ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் முதல் பாடமாக இருந்தது.

எங்களிடமும் என்ன கூறியிருந்தார்கள் என்றால், குழந்தைகளிடம் சொன்னால் கட்டுப்பட்டுக் கொள்ளும் பழக்கத்தை உண்டாக்குங்கள். ஒருவேளை இளம் பருவத்தின் குறும்புத்தனம் இருந்தால் (அதனால்) ஒன்றும் இல்லை. நீங்கள் சொன்னால் கட்டுப்படும் பழக்கத்தை ஒருமுறை ஏற்படுத்திவிட்டால், எந்த நேரத்தில் எதைத் தடுத்தாலும் தவிர்ந்து கொள்வார்கள். மேலும் என்றென்றும் சீர்திருத்தத்திற்கான நம்பிக்கையும் இருக்கும்.

எங்களுக்கும் இதையே கற்பித்திருந்தார்கள். பெற்றோர் இல்லாதிருக்கும்போது, அவர்களின் விருப்பத்திற்கு மாற்றமான ஏதேனுமொரு செயலை செய்து கொள்ளலாம் என்பதை நாங்கள் சிந்திக்கவும் முடியாதிருந்தது. ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள், ஒருபோதும் என் குழந்தைகள் பொய் பேசுவதில்லை என்று எப்போதும் கூறி வந்தார்கள். இந்த நம்பிக்கையே எங்களை எப்போதும் பொய்யிலிருந்து காப்பாற்றி வந்தது. இன்னும் கூறுவதாயின், இந்த நம்பிக்கையால் பொய்யின் மீது இன்னும் வெறுப்பு ஏற்பட்டுக் கொண்டிருந்தது. எனக்கு ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் கடுமையாக நடந்து கொண்டதாக ஒருபோதும் நினைவில்லை.

பின்னர் அவர்கள் இவ்வாறும் கூறிவந்தார்கள்:

முதல் பிள்ளையின் தர்பிய்யத்தில் முழு அழுத்தம் காட்டுங்கள். அடுத்த பிள்ளைகள், அதனுடைய முன்மாதிரியைக் கண்டு தானாகவே சரியாக நடந்து கொள்ளும்.”

மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா நாஸிர் அஹ்மத் (ரஹி) அவர்களின் தர்பிய்யத், ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் மடியிலேயே நிகழ்ந்தது. அவர்கள் கூறுவார்கள். ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின்

(தர்பிய்யத் ரீதியான அணுகுமுறையின்) கோட்பாடு எதுவெனில், குழந்தைகளை மக்ரிபிற்குப் பிறகு வீட்டை விட்டு வெளியே இருக்க விடமாட்டார்கள். இந்த அடிப்படையை உறுதியாகக் கடைபிடித்து வந்தார்கள். என்ன கட்டளை இருந்ததென்றால், மக்ரிப் தொழுது விட்டு நேராக வீட்டிற்கு வாருங்கள். பிறகு, இஷா தொழுகையைத் தவிர வேறெதற்காகவும் வெளியே செல்லாதீர்கள் என்பார்கள். மேலும் பெரியவர் ஆகும் வரை இந்தக் கட்டுப்பாடே இருந்து வந்தது.

ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் தர்பிய்யத்தின் முறை முற்றிலும் வித்தியாசமானதாக இருந்தது. அன்னார் (ரலி), எந்த விஷயத்தையும் திட்டியோ ஏசியோ சொன்னதில்லை. ஒருமுறை அன்னார் (ரலி) சில குழந்தைகளை விருந்துக்கு அழைத்திருந்தார்கள். (இது அன்னாரின் நடைமுறையாக இருந்தது.) அந்த காலத்தில் உணவு விரிப்பு தரையிலேயே விரிக்கப்பட்டு வந்தது. மேலும் அனைவரும் உட்கார்ந்து உண்பார்கள். என்னையும், வா! அனைவருடனும் அமர்ந்து உணவு உண் எனக் கூறினார்கள். என் வயது அப்போது மிகக் குறைவாக இருந்தது. மேலும் எவ்வாறு குழந்தைகள் பிடிவாதம் பிடிக்குமோ அவ்வாறு, நானும் சிறுவயதின் அறியாமையினால் மறுத்து விட்டேன். ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் கண்டிப்பதற்குப் பகரமாக, அப்படியா! உண்ண வேண்டாம். ஆனால் பிறகு சாப்பாடு கிடைக்காது என்பதை நினைவிற்கொள்! என்று கூறினார்கள். இறுதியில், சற்று நேரம் தயங்கிய பின் நானும் அந்தக் குழந்தைகளுடன் (சாப்பிட) இணைந்து கொண்டேன்.

ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் தர்பிய்யத் செய்யும்போது இவ்விஷயத்தையும் கருத்திற் கொள்வார்கள்.

அதாவது, வீட்டின் குழந்தைகள் மற்றும் அன்னாரின் வீட்டில் வளர்ந்துவரும் பிற அனாதை சிறுமிகளை நல்ல பழக்கங்களுடைய குழந்தைகளுடனேயே விளையாட விடுவார்கள். அப்போதுதான் அவர்களிடம் மற்ற குழந்தைகளின் தீய பழக்கவழக்கங்கள் ஏற்படாமல் இருக்கும். மேலும் குழந்தைகள் தீயவர்களுடன் இருப்பதை விட்டும் விலகி இருப்பார்கள்.

அவர்கள், எப்போது எந்தக் குழந்தைகளிடமும் ஏதேனுமொரு தீய பழக்கத்தைக் கண்டால் எவ்வாறு அறிவுரை கூறுவார்கள் என்றால், அவர்களிடம் சீர்திருத்தமும் ஏற்பட வேண்டும். மேலும் அநாவசியமாக பிறர் மத்தியில் வெட்கப்படும்நிலையும் வரக்கூடாது என்பதை கவனத்திற் கொள்வார்கள்.

ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் உள்ளத்தில் ஆசிரியர்களின் மீது மிகுந்த கண்ணியம் இருந்தது. மேலும் குழந்தைகளின் உள்ளத்திலும் ஆசிரியர்கள் மீது கண்ணியத்தை ஏற்படுத்த வேண்டும். மேலும், பிள்ளைகள் தங்களது ஆசிரியர்களுக்கு கண்ணியம் அளிக்க வேண்டும் என்ற முயற்சியை அன்னார் மேற்கொண்டு வந்தார்கள்.

ஷேக் யஃகூப் அலீ இர்ஃபானீ சாஹிப் அவர்கள், ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது சாஹிப் அவர்களின் ஆசிரியராக இருந்தார்கள். ஒருநாள் அவர்களின் மனைவி, ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களோடு அமர்ந்திருந்தார்கள். அந்நேரம் மிகச் சிறுவராக இருந்த மியான் சாஹிப் ஒரு ரப்பர் பாம்பைக் கொண்டு வந்தார்கள். திடீரென அதை அவர்கள் முன்னால் விட்டு விட்டார்கள். இவ்வாறு திடீரென ஒரு பாம்பைக் கண்டு அவர்கள் நடுங்கி விட்டார்கள்.

ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அப்பெண்மணியின் நிலைமையைக் கண்டு அவர்களுக்கு ஆறுதல் அளித்தவாறு, 'மருமகளே! இதுவோ ரப்பர் பாம்பாகும். நீங்கள் வெறுமனே (ஒன்றுமற்றதற்கு) அஞ்சுகிறீர்கள்.' மேலும் உடனே தமது மகனிடம் 'மியான் மஹ்மூது! இவர்கள் உமது ஆசிரியரின் மனைவி ஆவார்கள். தாங்கள் என்ன (இவ்வாறு) செய்துவிட்டீர்கள்?' என்று கேட்டார்கள். அவர்கள் வெட்கப்பட்டு, மன்னிப்புக் கேட்டவாறு 'அம்மா நான் தவறிழைத்து விட்டேன்.' என்று கூறினார்கள்.

## குழந்தைகள் மீதான அன்பு:

தர்பிய்யத் வகையிலான விஷயத்தில் அன்னார் மிகுந்த கவனம் செலுத்தி வந்த அதே வேளையில், மறுபுறம் குழந்தைகளிடம் அன்னார் காட்டிய அன்பும் அதிகமாக இருந்தது. அவர்களின் சின்னஞ்சிறு விஷயங்களுக்கும் மிகுந்த அக்கறை காட்டி வந்தார்கள். தமது குழந்தைகள் மட்டுமின்றி ஜமாஅத்தின் எல்லாக் குழந்தைகள் மீதும் அன்னாருக்கு மிகுந்த அன்பு இருந்தது. அனைவரையும் தமது குழந்தைகளைப் போல் கருதி வந்தார்கள்; அவர்களுக்கு உண்ணவும் பருகவும் அளித்து மிகுந்த மகிழ்ச்சியடைந்து வந்தார்கள். அவர்களிடம் மகிழ்ச்சியாகப் பேசியும், நகைச்சுவைகள் கூறியும், விடுகதைகளுக்கு விடை கூற வைத்தும், கதைகள் கூறியும் வந்தார்கள். தாமும் மிகுந்த ஆர்வத்தோடு அவர்களிடமிருந்து கேட்டும் வந்தார்கள்.

ஒருமுறை இர்ஃபானீ சாஹிபின் மனைவி, (இவர்களைப் பற்றி ஏற்கனவே கூறப்பட்டு விட்டது) ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களிடம் வந்தார்கள். அப்போது வயதில் சிறுவராக இருந்த ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களுக்கு அருகில் அமர்ந்திருந்தார்கள். மேலும்

அம்மா ஜான் (ரலி) அவர்களின் பணிப்பெண்ணாகிய சர்தாரிடம் கதைகள் கேட்டுக் கொண்டிருந்தார்கள். இர்ஃபானீ சாஹிபின் மனைவியைப் பார்த்த சர்தார், 'மியா(ன்)! இப்போது இவரிடம் (கதை) கேளுங்கள்' என்று கூறினார். உடனே, அவர்களும் ஒரு கதை சொன்னார்கள். அது மியா(ன்) மஹ்மூதிற்கு மிகவும் பிடித்திருந்தது. அடுத்த நாள், (இர்ஃபானீ சாஹிப் அவர்களின் மனைவி) அவர்கள் அம்மா ஜான் (ரலி) அவர்களிடம் சென்றபோது அவர்களைப் பார்த்து மியா(ன்) மஹ்மூது வந்து விட்டார்கள். மேலும் அம்மா ஜான் (ரலி) அவர்களின் மடியில் உட்கார்ந்தவாறு,

"தாங்கள் இவர்களிடம் கதை சொல்லும்படி சொல்லுங்கள்" என்றார்கள். மேலும் மீண்டும் மீண்டும் அழுத்தம் கொடுத்தார்கள். இறுதியில் அம்மா ஜான் "மருமகளே! என் மகன் கதை சொல்லும்படி கூறுகிறானே, உங்களுக்குத் தெரியவில்லையா?" என்று கூறினார்கள். அதற்கு "அம்மா ஜான், பகலில் கதை நன்றாகவா இருக்கும்!" என்றார்கள். அன்னார் ரலியல்லாஹு அன்ஹா கூறினார்கள்: "பரவாயில்லை! நாங்கள் பகலிலேயே கேட்போம்." அவர்கள் கதை சொல்லிக் கொண்டிருக்கும்போது, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் வந்து விட்டார்கள். பிறகு, "இவர்கள் என்ன கூறுகின்றார்கள்?" என்று கேட்டார்கள். ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள், "கதை சொல்லுகிறார்கள்" என்று கூறினார்கள். (உடனே) அவர்கள்:

'ஆம். சரிதான்; சொல்லுங்கள்! குழந்தைகளுக்கு கதைகள் கூறுவதால் அறிவு அதிகரிக்கும்' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் குழந்தைகளின் சின்னஞ்சிறு கேலிப் பேச்சுக்களைத் தவறாகக் கருதியதுமில்லை;

சின்னஞ்சிறு விஷயங்களுக்காகக் கோபம் கொண்டதுமில்லை. ஒருமுறை ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களிடம் நான்கு சிறுமிகள் வந்தனர். அன்னார் (ரலி) எழுந்தார்கள். பிறகு அவர்களுக்காக சில்கோசா பைன் நட்ஸ்களை எடுத்துக் கொண்டு வந்தார்கள். அவர்களில் அனைவரையும் விட சிறுமியாக இருந்தவள் குறும்பு மிக்கவளாக இருந்தாள். அவள் தனது அக்காவிடம் கூறினாள்: தாஹிரா! பைன் விதைகளை உண்ண வேண்டாம். பிறகு அம்மா ஜான் (ரலி) அவர்கள் உன்னை பேராசைக்காரி எனக் கருதுவார்கள். ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் அவளின் இவ்விஷயத்தைக் கேட்டு மிகவும் சிரித்தார்கள். பிறகு கூறினார்கள்: நான் உன்னை ஒருபோதும் பேராசைக்காரி எனக் கருத மாட்டேன். எந்தத் தயக்கமுமின்றி நன்றாக சாப்பிடு.

## உறவினர்களிடமும், சந்ததிகளிடமும் காட்டிய அன்பு:

ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களுக்குத் தமது எல்லா உறவினர்களிடமும் மிகுந்த அன்பு இருந்தது. குறிப்பாக, தமது சகோதரர்களிடமும், பிள்ளைகளிடமும் மிகுந்த அன்பு இருந்தது. தமது மருமகள்களை மகள்களைப் போன்று நேசித்து வந்தார்கள். அவர்களின் மீது மிகுந்த அக்கறை கொண்டிருந்தார்கள். எல்லாரின் தேவைகளையும் கருத்திற் கொண்டிருந்தார்கள்.

உறவினர்களை விருந்திற்கு அழைப்பது, அனைவருக்கும் பிடித்த உணவை சமைத்து வழங்குவது ஆகியன அன்னாரின் சிறப்பான பழக்கமாக இருந்தது. ஒவ்வொரு பெருநாளின்போதும் அனைவரும் அன்னாரின் விருந்தினர்களாக இருப்பார்கள். இறுதி வயது வரை அனைவருக்கும் விருந்தளித்து வந்தார்கள். தமது இறுதி வயதில்,

உடல்நலம் மிகுந்த பலவீனம் அடைந்த சமயத்தில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிபை அழைத்து அன்னார் (ரலி) கூறினார்கள்:

"மியா(ன்)! எனது உடல் தற்போது மிகவும் பலவீனமாக உள்ளது. யாராவது கொஞ்சம் தொகை என்னிடமிருந்து பெற்று (நமது) குடும்பத்தார்களின் விருந்து உபசாரத்திற்கான ஏற்பாட்டை செய்ய வேண்டும் என என்னுள்ளம் விரும்புகிறது. (ஏனெனில்) இந்நிலையில் என்னால் எதுவும் செய்ய இயலாது." ஆதலால் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் அவர்கள் தாமே எல்லா ஏற்பாட்டையும் செய்து வைத்தார்கள்.

ஹஸ்ரத் டாக்டர் மீர் முஹம்மத் இஸ்மாயீல் சாஹிப் கூறி வந்தார்கள்: ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களுக்குத் தமது சகோதரர்களின் கஷ்டத்தைப் பற்றி மிகுந்த உணர்வு இருந்து வந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மற்றும் மற்ற அன்பர்கள் எனது ஆவலுக்கேற்ப, மருத்துவம் படிப்பதற்கான ஆலோசனை எனக்கு வழங்கியபோது, பொருளாதார சிக்கலின் காரணத்தால் நான் கஷ்டத்தில் வீழ்ந்து விட்டேன். இனி எனக்கு அட்மிஷன் கிடைக்காது என நம்பிக்கையிழந்து விட்டேன்.

ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களுக்கு (விஷயம்) தெரிந்தவுடனேயே கூறினார்கள்: "நீ ஆர்வத்துடன் படிக்கச்செல். நான் எனது சொந்தச் செலவுகளிலிருந்து உனக்குப் பணம் தருவேன். யாருக்கும் தெரியாது."

மீர் சாஹிபின் தன்மானத்திற்கு இழுக்கு ஏதும் ஏற்படக் கூடாது என்பதற்காகத் தான் இந்த விஷயத்தை ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் கூறினார்கள். மேலும் இவ்வாறாக, இறையருளால் மீர் முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் அவர்கள் தமது காலத்தின் மகத்தான, சிறந்த அறுவை சிகிச்சை மருத்துவராக ஆனார்கள்.

மருமகள்களிடம் நடந்துகொண்ட விதம் பற்றி அன்னாரின் மூத்த மருமகள், (ஹஸ்ரத் மிர்ஸா நாஸிர் அஹ்மத் சாஹிபின் தாயார்) ஹஸ்ரத் உம்மே நாஸிர் சாஹிபா கூறுகின்றார்கள்:

எனக்குத் திருமணம் நிகழ்ந்தபோது, நான் பதினோறு வயது உடையவளாக இருந்தேன். முதல் நாள் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் என்னை தம்மோடு உறங்க வைத்தார்கள். (ஏனெனில்) இவள் சிறுமியாக இருக்கிறாள்; கவலை அடைந்து விடக் கூடாதே என்பதற்காக (அவ்வாறு செய்தார்கள்). மேலும் பிறகுள்ள நாட்களும் என் மீது எந்த அளவிற்கு அன்பு செலுத்தினார்கள், அக்கறை காட்டினார்கள் என்றால், காலம் செல்லச் செல்ல அன்னாரின் அன்பு அதிகமாகிக் கொண்டே சென்றது. நான் எனது பிறந்த வீட்டை மறந்துவிடும் அளவுக்கு (என்மீது அன்பு செலுத்தினார்கள்). ஒரு தாயின் மடியிலிருந்து வெளியேறி, இன்னொரு தாயின் பாசம் மிகுந்த மடியில் இறைவன் என்னை அனுப்பி விட்டது போல (எனக்கு) இருந்தது.

சந்ததிகளிடம் அன்னாரின் அன்பின் நிலைமை பற்றி, ஹஸ்ரத் நவாப் முபாரக்கா பேகம் சாஹிபா இவ்வாறு கூறுகின்றார்கள்:

அன்னார் (ரலி) சிறந்த தாயாக விளங்கினார்கள். அன்னாரின் நெஞ்சம், தாய்மையின் உணர்வுகளாலும் பாசத்தாலும் நிரம்பியிருந்தது. இறுதி வயது வரை, பிள்ளைகளின் சின்னஞ்சிறிய விஷயங்களிலும் அக்கறை காட்டி வந்தார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுக்கு சிறுவயதில், உருண்டை வடிவ நட்சத்திர மிட்டாய், அதை பஞ்சாப் மாநிலத்தில் மாயீ புட்டி தா ஜாட்டா என்று அழைப்பார்கள் – அது மிகவும் பிடித்தமானதாக இருந்தது. எப்பொழுதெல்லாம் எந்தக்

குழந்தையாவது சுவைத்துக் கொண்டிருக்கக் கண்டாலும் சரியே, பணம் கொடுத்து உடனே வாங்கி வருமாறு கூறுவார்கள்.

மியா(ன்) மஹ்மூதிற்குக் கொடுத்து வாருங்கள். இது அவர்களுக்கு ரொம்பப் பிடிக்கும் என்று கூறுவார்கள். இவ்வாறாக, எப்பொழுதும் அவர்களின் உணவு விஷயங்களைக் கருத்திற் கொள்வார்கள்.

இவ்வாறாக, ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிபிற்குப் பிடித்தமான ஏதேனுமொரு பொருள் சமைக்கப்பட்டிருந்தால் இது எனது புஷ்ராவிற்குப் (அதாவது ஹஸ்ரத் பஷீர் அஹ்மத் சாஹிபிற்கு) பிடித்தமானது. யாராவது சென்று அவருக்குக் கொடுத்து வாருங்கள் என்று கூறுவார்கள்.

தமது கடைசி நோயின் நாட்களில், அடிக்கடி அரைமயக்க நிலை ஏற்பட்ட போதும், பிள்ளைகளைப் பற்றிய கவனம் இருந்தது. ஒருநாள், ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்களை, மிர்ஸா ஷரீஃப் அஹ்மது சாஹிப் என்று கருதி விட்டார்கள். அப்போது அன்னாரின் நோயின் காரணத்தால், அவர்கள் (மிர்ஸா ஷரீஃப் அஹ்மது சாஹிப்) லாஹூரில் இருந்தார்கள். என்னிடம் ஷரீஃபிற்குத் தேநீர் அருந்தக் கொடுக்கவும். தலைவலி ஏதாவது வந்து விடப் போகிறது என்று மெல்லக் கூறினார்கள்.

ஹஸ்ரத் நவாப் முபாரக்கா பேகம் சாஹிபா கூறுகின்றார்கள்: நான் எனது கணவரின் மரணத்திற்குப் பிறகு, ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களிடம் எந்த அளவிற்குப் பாசத்தைப் பெற்றேன் என்றால், எனக்கு எனது துக்கம் மறந்து போயிற்று; நான் மீண்டும் தாயின் மடியில் திரும்பி வந்து விட்டது போன்று தோன்றிற்று. (இந்தியா–பாகிஸ்தான்) பிரிவினை ஏற்பட்ட ஆரம்ப காலத்தில், காதியானிலிருந்து லாஹூர் வந்தபோது யாருடைய பொருளாதார நிலையும் நன்றாக இருக்கவில்லை.

ஒருமுறை, நான் கடைவீதிக்குச் சென்றேன். ஒரு துணி (எனக்கு) மிகவும் பிடித்திருந்தது. ஆனால் வாங்க இயலவில்லை. திரும்பி வந்து, பேச்சோடு பேச்சாக அம்மா ஜான் (ரலி) அவர்களிடம் சொன்னபோது, எந்தக் கடையில் பார்த்தாய்? என்ன நிறமுடையதாய் இருந்தது என்று கேட்டார்கள். சொல்வதற்கு சாதாரண விஷயங்கள் தான். ஆனால் அடுத்த நாள், அதே சட்டைத் துணியை அம்மா ஜான் (ரலி) அவர்கள் கொண்டு வந்து, வாங்கிக் கொள். தைத்து அணிந்து கொள். எனது மகள் மனதைக் கட்டுப்படுத்தி வெறுங்கையோடு திரும்பி விட்டாள் என்பதால், நேற்றிலிருந்து எனக்குத் தூக்கம் வரவில்லை என்றார்கள்.

சுருங்கக் கூறின், ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களுக்குத் தமது பிள்ளைகளின் சின்னஞ்சிறிய ஆசைகளின் மீதும் அக்கறை இருந்தது. மேலும் பிள்ளைகளின் துன்பத்தை, தமது துன்பமாகக் கருதி வந்தார்கள்.

## அனாதைகளிடம் அக்கறை:

பொதுவாக அனைத்து அனாதைகளையும் கவனத்தில் வைப்பார்கள். ஆனால், குறிப்பாக எந்தெந்த அநாதை சிறுமிகளை அன்னார் (ரலி) வளர்த்தார்களோ அவர்களிடம் மிகுந்த அன்பும் பாசமும் காட்டி வந்தார்கள். அவர்களுக்குத் தமது குழந்தைகளுக்கு தர்பிய்யத் செய்வது போல, மார்க்க ஒழுக்கப் பயிற்சி வழங்கினார்கள்.

அன்னார் (ரலி) அவர்கள் அச்சிறுமிகளைத் தாமே நீராட்டுவார்கள். தலையில் வறட்சி ஏற்படாமல் இருக்கும் என்பதற்காகத் தலையில் தயிர் தேய்ப்பார்கள், எண்ணை தடவுவார்கள். மேலும் இந்த வேலைகளை செய்யும்போது, அன்னாரின் முகத்தில் மகிழ்ச்சி ஏற்படும். சிறுமி(கள்) புரியும் தகுதி

அடையும்போது அவர்களுக்கு முதலில் கலிமாவும் பிறகு, பொருளுடன் கூடிய தொழுகையையும் கற்பிப்பார்கள். தொடக்க மார்க்கக் கல்வியைத் தாமே அளித்து வந்தார்கள். பிறகு ஏதாவது ஓர் ஆசிரியையை நியமித்து திருக்குர்ஆன் ஓதி முடிக்க வைப்பார்கள். உணவு சமைத்தல், தைத்தல், பூத்தையல் (Embroidery) ஆகியவற்றைக் கற்றுக் கொடுப்பார்கள்.

ஆமினா நேக் முஹம்மத் சாஹிபாவையும் அன்னாரே வளர்த்தார்கள். இவையனைத்தையும் அவர்களுக்கு கற்பித்தார்கள். உலகக் கல்வியும் கற்க வேண்டும் என்பதற்காகப் பள்ளிக்கூடத்திற்கும் அனுப்பினார்கள். பிறகு அவர்களிடம் (அவர்களுக்கு) உர்து சரியான முறையில் பேச வர வேண்டும் என்பதற்காக சின்னச் சின்ன கதைப் புத்தகங்களின் (கதைகளை வாசிக்க வைத்து) கேட்பார்கள். பிறகு, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் புத்தகங்களைக் கேட்பார்கள். பிறகு, பொருள்களை கற்பிப்பார்கள். தர்பிய்யத்தும் செய்வார்கள். கூடவே சின்னஞ்சிறிய மகிழ்ச்சிகள்மீதும் அக்கறை காட்டுவார்கள். பிறகு அந்தப் பெண்களுக்குத் தாமே திருமணமும் செய்து வைத்தார்கள்.

ஒருமுறை, ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் ஒரு சிறிய கிராமத்தின் பக்கம் நடைபயிற்சிக்காக சென்றார்கள். கூடவே இமாம் பீ மற்றும் மாயீ ஃபுஜ் ஆகிய இரண்டு பணிப்பெண்கள் உடனிருந்தார்கள். அன்னார் கிராமத்தின் ஒரு தெருவைக் கடந்தபோது ஒரு அழுக்கான கந்தல் துணியினால் சுற்றப்பட்ட ஒரு சிறுமியைப் பார்த்தார்கள். மேலும் கிர்ணி பழத்தின் அழுக்கான தோலை வாயில் போட்டுக் கொண்டிருந்தாள். அன்னார் அவளின் அருகே நின்றவாறு இவள் யார் என்று கேட்டார்கள். கிராமத்தின் சில நபர்கள், இவள்

அநாதை ஆவாள் என்றும் ஊமை, செவிடு ஆவாள் என்றும் கூறினார்கள்.

அன்னார் (ரலி) அவர்கள் ஒரு பணிப்பெண்ணுக்கு, அவளை அப்படியே தம்முடன் கொண்டு வருமாறு கட்டளையிட்டார்கள். அந்தச் சிறுமி ஆறு, ஏழு வயதுடையவளாக இருந்தாள். அவளைத் தூக்கிக் கொண்டு காதியான் சென்றார்கள். மேலும் நேராக அப்போது தாருல் மஸீஹில் நடந்து கொண்டிருந்த பெண்கள் பள்ளிக்கூடத்திற்கு போய்ச் சேர்ந்தார்கள். அந்தச் சிறுமியின் தோற்றம் எந்த அளவிற்கு அச்சுறுத்துவதாக இருந்ததென்றால், அங்குள்ள எல்லாச் சிறுமிகளும் அவளைக் கண்டு பயந்தார்கள். மேலும் கத்திக் கொண்டு அங்குமிங்கும் ஓடினார்கள்.

ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி), அவர்களின் நிலைமையைக் கண்டு சிரிக்கலானார்கள். பிறகு, "இவள் பெற்றோரை இழந்த அநாதை சிறுமி ஆவாள். இவளை நீங்கள் தான் ஓர் ஒழுங்கிற்குக் கொண்டு வர வேண்டும். இவள் பெயர் ஹைமீ ஆகும்," என்றார்கள். பிறகு தாமே சென்று ஃபினாயில், சீப்பு, எண்ணெய், விலையுயர்ந்த ஒரு ஜோடித் துணி, காலணி போன்றவற்றைக் கொண்டு வந்தார்கள். மேலும், ஆசிரியை மைமூனா சாஹிபாவிடம் கூறி அவளை நீராட்டினார்கள்; கழுவினார்கள். தூய ஆடை அணிய வைத்தார்கள்; தலை சீவினார்கள்; கொண்டை போட்டு விட்டார்கள். பிறகு அவளுக்கு உணவளித்தார்கள். சில நாள்களில், விலங்குபோல் இருந்த இந்தக் குழந்தை, அம்மா ஜான் (ரலி) அவர்களின் கவனம் மற்றும் இறையருளால் நல்லநிலைக்கு மாறினாள். மூன்றாம், நான்காம் நாள் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் அவளைத் தாமே நீராட்டி வந்தார்கள். பேனை நீக்குவார்கள். தலைவாரி

கொண்டை போட்டு விடுவார்கள். (இவையனைத்தையும்) தமது மகளுக்குச் செய்வதைப் போல் செய்தார்கள். குழந்தைகளோடு இருந்து இருந்து அவளுக்கு எந்த அளவு அறிவு வந்ததென்றால், அவள் வீட்டு வேலைகளும் செய்யத் துவங்கி விட்டாள். இளமைப் பருவத்தை அடைந்த பிறகு, ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் அவளுக்கு மணம் முடித்துக் கொடுத்தார்கள்.

## பணியாளர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுதல்:

தமது பணியாளர்களுடன் மிகவும் நல்ல முறையில் நடந்து கொள்வார்கள். மேலும் அவர்களின் ஓய்வு மற்றும் உணவு பற்றி மிகுந்த அக்கறை கொள்வார்கள். துக்கம், வேதனையின் போது அவர்களுக்கு உதவுவார்கள். ஒருமுறை ஒரு பெண், இன்ன வேலைக்காரி ரொட்டி குறைவாக கிடைப்பதாக கூறுகின்றாள் என்று கூறினாள். (உடனே) ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள், சமையலறையிலிருந்து அவளுக்குரிய உணவை வரவழைத்தார். அதில் மேலும் அதிகமாக குழம்பு ஊற்றினார்கள். இன்னும் இரண்டு ரொட்டிகளைக் கொண்டு வரச்செய்து, அவளது ரொட்டிகளுடன் சேர்த்து வைத்துவிட்டார்கள். பிறகு, தமது துண்டில் சுற்றி வைத்துக் கொண்டார்கள். பிறகு, அவள் குழந்தைகள் உடையவள். அவளுக்கு ரொட்டி குறைவாக கொடுக்காதீர்கள் என்று கூறினார்கள். பிறகு, அந்தப் பணிப்பெண் வந்தபோது, அவளது உள்ளத்தை மகிழ்விக்கும் வகையில், “பார்! நான் உனது ரொட்டிகள் குறைந்து விடக்கூடாது என்பதற்காக, எனது துண்டில் கட்டி வைத்திருக்கிறேன்” என்று கூறினார்கள்.

## தேவையுடையவர்களுக்கு உதவி:

மதிப்பிற்குரிய அப்துர் ரஹீம் சாஹிப் ஷர்மா தமது ஒரு சம்பவத்தைக் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மிர்ஸா ஷரீஃப் அஹ்மது

சாஹிப் அவர்கள் தமது மாளிகையின் ஒரு தங்குமிடத்தை எங்களுக்கு தங்குவதற்காக வழங்கினார்கள். அப்போது வீட்டில் ஐந்து பேர் இருந்தோம். மேலும் சம்பளமோ மிகக் குறைவு, கஷ்டப்பட்டு வாழ்ந்து வந்தோம். ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களுக்கு எங்களுடைய வறுமைநிலை தெரிய வந்தது, மேலும் வீட்டிலுள்ள அனைவரும் அரை லிட்டர் பாலை அனுசரித்து பயன்படுத்துகிறோம் என்று தெரிய வந்தபோது, அன்னார் அளவு கடந்த கருணையோடு தமது ஒரு பசுவை எங்களுக்கு அனுப்பி விட்டார்கள். அந்தப் பசு நல்ல இனத்தைச் சார்ந்ததாக இருந்தது. (தினசரி) ஏழு, எட்டு லிட்டர் பால் கொடுக்கும். அந்தப் பசு வீட்டில் வந்த உடனேயே எத்தகைய பரக்கத் (அபிவிருத்தி) கிடைத்ததெனில், சில நாட்களிலேயே எங்கள் நிலைமைகள் மாறி விட்டன.

## தமது வேலையை தாமே செய்தல்:

ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களிடம் கடினமாக உழைக்கும் பழக்கம் இருந்தது. சின்னஞ் சிறிய வேலையையும் தாமே தமது கைகளால் செய்வதை விரும்பி வந்தார்கள். ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் கூறுவார்கள்: நான் அவர்களை எனது கண்களால், பலமுறை அவர்கள் சாப்பாடு சமைத்தவாறும், தறியால் நூல் நூற்பதையும், கட்டிலைப் பழுது பார்த்தவாறும், இன்னும் சொல்வதாயின் எருமைகளுக்குத் தீனி போட்டவாறும் பார்த்துள்ளேன். சில நேரங்களில் தூய்மைப் பணியாளர்களுக்கு அருகில் தாமே நின்று கொண்டு சுத்தம் செய்ய வைப்பார்கள். மேலும் அவர்களுக்குப் பின்னாலிருந்து குவளையால் தண்ணீர் ஊற்றி வருவார்கள்.

காதியானிலிருந்து வந்த பிறகும், பலவீனம் இருந்தபோதிலுங்கூட தமது பல வேலைகளைத் தாமே

செய்வார்கள். பெட்டிகளிலிருந்து பொருட்களைத் தாமே வெளியே எடுத்து வைப்பார்கள். எவராவது சட்டியை (அடுப்பில்) ஏற்றினால், அங்கு அமர்ந்து கொண்டு தாமே கரண்டியால் கிண்டுவார்கள்.

(நடக்கும்போது) கைத்தாங்கலுக்காக உதவி பெறுவதை முற்றிலும் விரும்பியதில்லை. எவரேனும் உதவி அளிக்க விரும்பி –னாலும், நானாகவே நடப்பேன். உதவ வேண்டாம் என்பார்கள்.

தாமே தமது வேலைகளை செய்து வந்ததுடன், மற்றவர்களின் வேலைகளிலும் உதவியாய் இருப்பதும் அவர்களின் பழக்கமாக இருந்தது.

சவுத்ரி அப்துல்லாஹ் கான் சாஹிப் மர்ஹூம் அவர்களின் மனைவி ஆமினா கூறுகின்றார்கள்: ஒருமுறை ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் எங்கள் வீட்டிற்கு வந்தார்கள். எனது தாயார் பால் கடைந்து கொண்டிருந்தார்கள். (என்) தம்பி அழுது கொண்டிருந்தான். அம்மா ஜான் (ரலி) அவர்கள் மிகுந்த பாசத்தோடு, “எழுந்து குழந்தையைத் தூக்குங்கள்” என்று கூறினார்கள்.

பிறகு தாமே அமர்ந்து பால் கடைந்தார்கள். தாமே வெண்ணெய் எடுத்தார்கள். இதன் பிறகு, நீண்ட காலம்வரை ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) பெஹிஷ்த்தி மக்பரா செல்லும்போது யாராவது ஒரு பெண்ணை பால் போன்றவை கடைவதற்காக எங்கள் வீட்டில் விட்டுச் சென்றுவிட்டு பிறகு திரும்பி வரும்போது உடன் அழைத்துச் செல்வது அன்னாரின் வழக்கமாக இருந்தது.

## போதுமென்ற மனமும், தியாகமும்:

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறி வந்தார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இறந்தபோது, எங்களிடம் (வாழ்க்கையை கழிக்கும்) எந்த வழிவகையும் இல்லை. மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட

மஸீஹ் (அலை) அவர்களுக்கு அப்போது கொஞ்சம் கடனும் இருந்தது. ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள், இந்தக் கடனை அடைக்க வேண்டும் என ஜமாஅத்திடம் கூறவில்லை. மாறாக, அன்னாரிடம் இருந்த நகையை விற்று ஹுஸுர் அவர்களின் கடனை அடைத்தார்கள். நான் அப்போது சிறுவனாக இருந்தேன். எனக்கு அவர்களுக்குத் தொண்டாற்ற எந்த சந்தர்ப்பமும் இல்லாதிருந்தது. எனினும், என் உள்ளத்தில், அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எவ்வளவு அன்பு செலுத்தும், தியாகம் செய்யும் துணைவியை வழங்கியுள்ளான் என்ற தாக்கம் என்றென்றும் இருந்து வந்தது.

## ஷிர்க்கின் மீது வெறுப்பு:

அன்னார் (ரலி) அவர்களுக்கு ஷிர்க்கின் மீது கடுமையான வெறுப்பு இருந்தது. இது குறித்து இரண்டு, மூன்று உதாரணங்களை உங்களுக்குக் கூறுகின்றோம்:

ஒருமுறை ஒரு பெண்மணி, நோயாளியான தன் உறவினர் ஒருவர் உடல் நலம் பெற்றதைப் பற்றி கூறிக் கொண்டிருந்தார். இறுதியில், எந்த மருத்துவத்தாலும் பலன் கிடைக்கவில்லை. ஆனால் அந்தக் குறிப்பிட்ட மருந்தால் தற்போது சுகம் கிடைத்துள்ளது என்று கூறினார். ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் மிகுந்த எழுச்சியுடன், “மருத்துவரின் இந்த சிகிச்சைக்கான யோசனையில் இறைநாட்டமும் இணைந்திருந்தது என்றும் தற்போது இறையருளால் ஆரோக்கியமாக உள்ளது என்று நீங்கள் ஏன் கூறவில்லை?” என்று கேட்டார்கள்.

மற்றொருமுறை ஒரு பெண்மணி ஒரு குவளையை ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களுக்குக் கொடுத்தார்கள். அதில் ஏதோ எழுதப்பட்டிருந்தது. மேலும் அந்தப் பெண்மணி, இதில் நீரூற்றிப் பருகுங்கள் என்று கூறினார். ஹஸ்ரத் அம்மா

ஜான் (ரலி) அவர்கள் தடுத்துவிட்டதுடன், நாங்கள் அவ்வாறு செய்வதில்லை. இது ஷிர்க் ஆகும் எனக் கூறினார்கள்.

ஒரு பெண்மணி, தினசரி வானொலியில் செய்திகள் கேட்டு, ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களுக்குக் கூறிவந்தார். ஒருநாள், ஏதோ ஒரு செய்தியைக் கூறி விட்டு கூறினாள்:

ரேடியோ கண்டுபிடித்தவருக்கே நான் அர்ப்பண –மாகின்றேன். மேலும், எவ்வளவு நல்ல சாதனத்தை கண்டுபிடித்துள்ளார்! வீட்டில் அமர்ந்தவாறே முழு உலகின் செய்திகளைக் கேட்டுக் கொள்ளலாம்; குரலை கேட்டுக் கொள்ளலாம் என்றார்.

ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் தாமதமின்றி கூறினார்கள்: என் இறைவனிடம் என்னை அர்ப்பணிக்க (மனம்) நாடுகிறது. அவனே இப்படிப்பட்ட பொருட்களை கண்டுபிடிக்கும் அறிவை மனிதனுக்கு வழங்கியுள்ளான்!

## விருந்தோம்பல்:

அன்னாருக்கு விருந்தினர்களை உபசரிக்கும் பழக்கம் அதிகமிருந்தது. யார் வீட்டிற்கு வந்தாலும் அவர்களை உபசரிப்பார்கள். விருந்தினர்கள் மீது அக்கறை காட்டுவார்கள். மேலும் ஒவ்வொருவரின் பழக்கவழக்கத்திற்கேற்ப அவர்களுக்கு (உணவு) வகைகளை வழங்குவார்கள்.

சவுத்ரி ஃபதஹ் முஹம்மத் சாஹிப் சய்யால் அவர்கள் முதன்முதலில் காதியான் வந்தபோது நான்காவது வகுப்பில் படித்து வந்தார்கள். அந்தக் காலத்தில் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் குறிப்பாக விருந்து உபசரிப்பில் பங்கேற்பார்கள். எல்லா விருந்தினர்களும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் சேர்ந்து வட்ட அறையில் உணவு உண்பார்கள். முதல் நாள் சவுத்ரி சாஹிப் உணவு உண்டபோது,

உணவிற்குப் பிறகு, ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள், ஒரு நபரை அனுப்பி எந்த விருந்தினருக்காவது ஏதேனும் குறிப்பிட்ட உணவு வேண்டும் எனில் கூறட்டும் எனக் கேட்டார்கள்.

சவுத்ரி சாஹிப் (எந்தவித) தயக்கமுமின்றி எனக்கு லஸ்ஸிக்கான பழக்கம் உள்ளது எனக் கூறினார்கள். சற்று நேரத்திற்குப் பிறகு தயிரில் (தயாரான) இனிப்பான லஸ்ஸி வந்தது. அதனை வேறு சில நண்பர்களும் பருகினார்கள். மேலும் சிலர் டீயும், வெற்றிலை போன்றவற்றையும் வரவழைத்தார்கள்.

## இனிய இயல்பு:

ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) மிகவும் இனிய இயல்பு உடையவர்களாக இருந்தார்கள். சின்னஞ்சிறிய பொழுதுபோக்கை விரும்புவார்கள். நடைபயிற்சிக்கு செல்வதை அன்னார் அதிகம் விரும்பினார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் உயிரோடிருந்தபோது அவர்களுடன் இணைந்து நடைபயிற்சிக்கு சென்று வந்தார்கள். அன்னார் (அலை) மரணித்த பிறகும் நடைபயிற்சி செய்து வந்தார்கள். சுற்றுலாவும் சென்று வந்தார்கள்.

ஒருமுறை அன்னார் (ரலி) தமது தோட்டத்தில் உருளைக்கிழங்கு விளையச் செய்தார்கள். மேலும் ஹஸ்ரத் நவாப் முபாரக்கா பேகம் சாஹிபா, ஸாஹிப்ஸாதீ அமத்துல் ஹஃபீஸ் பேகம் சாஹிபா மற்றும் மற்ற சிறுமிகளையும், மருமகள்களையும் அழைத்துக் கொண்டு தோட்டத்தில் நடைபயிற்சிக்காக சென்றார்கள்.

இரண்டு கூடை உருளைக் கிழங்கை வேக வைத்து ஊறுகாய் போட்டார்கள். மேலும் தமது தோட்டத்தின் லக்கோட்டா பழத்தை பறிக்கச் செய்தார்கள். சட்னி தயார் செய்தார்கள். தரையில் ஜமுக்காளம் விரித்து அனைவரும் இருந்து விருந்தை

உண்டார்கள். பெண்கள் ஊஞ்சல் ஆடினார்கள்; விளையாடினார்கள். அதிகமாக மனமகிழ்ச்சியடைந்தார்கள்.

ஒருமுறை நடைபயிற்சிக்கு சென்றவாறு இர்ஃபானீ சாஹிப் அவர்களின் வீட்டிற்குச் சென்றார்கள். அவர்களின் வீடு கால்வாயின் ஓரத்தில் இருந்தது. அம்மா ஜான் (ரலி) அவர்கள் அங்கு சிறுவர்களை ஒன்று சேர்த்துக் கூறினார்கள்: சிறுவர்களே! எனக்கு நீச்சலடித்துக் காட்டுங்கள். கால்வாயின் ஓரத்தில் ஒரு மரத்தின் கீழே தமது கட்டிலைப் போடச் செய்தார்கள். பிறகு அங்கு அமர்ந்து குழந்தைகளின் நீந்தும் திறமையைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களோடு ஹஸ்ரத் உம்மே நாஸிர் (நாஸிர் அவர்களின் தாயார்) மற்றும் பிற பெண்களும் இருந்தார்கள். அனைவரும் அங்கு உணவு உண்டார்கள்.

அன்னாரின் இயல்பில் நகைச்சுவை உணர்வும் இருந்தது. ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களிடம் ஒரு பெண் உணவு சமைத்து வந்தார். அவரை எல்லாரும் அஸ்கரியின் அம்மா என்று அழைப்பார்கள். அவர்களின் பழக்கம் என்னவெனில், சட்டியில் கரண்டியை கலக்கிக் கொண்டிருப்பார்கள். கூடவே யா அல்லாஹ்! முழு உலகத்திலும் உள்ள உணவின் சுவையும் எனது ஹஸ்ரத் சாஹிபின் உணவில் வந்து விடட்டும் என்று துஆவும் செய்வார்கள். ஒருநாள் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் சிரித்துக் கொண்டே, அஸ்கரியின் அம்மா அவர்களே! எனது சகோதரரின் உணவின் சுவையுமா என்றார்கள். (அதாவது, ஹஸ்ரத் டாக்டர் மீர் முஹம்மத் இஸ்மாயீல் சாஹிப் அவர்கள். அப்போது அவர்கள் லாஹூரில் படித்து வந்தார்கள்.) அஸ்கரியின் அம்மா விரைவாகச் சொன்னார்கள்: அல்லாஹ்வே! மியா(ன்) இஸ்மாயீலுடைய உணவின் சுவை (இதில்) வரக்கூடாது.

## கல்விக்கு மதிப்பளித்தலும், இலக்கிய ஆர்வமும்:

அன்னார் கல்விக்கு மிகுந்த மதிப்பளித்து வந்தார்கள். ஆகவே கற்றுக் கொடுப்பவர்கள் மீதும் அளவு கடந்த அக்கறை காட்டி வந்தார்கள். மதிப்பிற்குரிய ஆசிரியை ச(க்)கீனா சாஹிபா கூறினார்கள்: “ஸாஹிப்ஸாதி அமத்துல் ஹஃபீஸ் பேகம் சாஹிபா ஐந்து, ஆறு வயதை அடைந்தபோது, ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் என்னை அவர்களுக்கு கற்றுக் கொடுக்க பணித்தார்கள். நான் அவர்களுக்கு உர்து எழுதப் படிக்க கற்பிக்கத் துவங்கினேன். அந்தக் காலத்தில் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் என்மீது எந்த அளவிற்கு கருணை காட்டினார்கள், எவ்வாறு எனது வாழ்வின் எல்லாத் தேவைகளையும் நிறைவேற்றினார்கள் என்றால், எனது எல்லாக் கவலைகளும் அகன்றன. பிறகு மதிப்பிற்குரிய ஸாஹிப்ஸாதீ சாஹிபாவுடைய திருமணம் நிகழ்ந்தபோது, அன்னார் (ரலி) அவர்கள் (அவர்களுடைய வீட்டு) அருகிலேயே நிலத்தைக் கொடுத்து அதில் வீடு கட்டிக் கொள்ளும்படி கூறினார்கள்.”

ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் கல்விக்கு மிகவும் மதிப்பளித்து வந்தார்கள். மேலும் அல்லாஹ் அவர்களுக்கு கல்வியறிவையும் வழங்கி இருந்தான். எப்பொழுது எவராவது எந்த வகையான ஆட்சேபணை செய்தாலும் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் மார்க்க ஞானத்திலிருந்து ஆதாரம் கொடுத்து அதற்கான பதிலை வழங்கிவிடுவார்கள். சேட் அப்துல்லாஹ் பாயீ அவர்களின் மனைவி கூறுகிறார்கள்:

“ஒருமுறை, சகோதரிகளாகிய நாங்கள் சிலர் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களோடு அமர்ந்திருந்தோம். நான் துணியாலான சில விளையாட்டு பொம்மைகளைப் பார்த்தேன். அவை குழந்தைகள் விளையாடுவதற்காக வைக்கப்பட்டிருந்தன.

‘‘பொம்மைகள் ஏன் வைக்கப்பட்டுள்ளன? மார்க்கம் தடுத்திருக்கின்றதே” என்று நான் கேட்டேன். அன்னார் தவறாக கருதாமல் இவ்வாறு பதில் அளித்தார்கள்: அசல் விஷயம் என்னவென்றால், உண்மையான மார்க்கம் எதை தடுத்துள்ளதென்றால், இந்து மதத்தைச் சார்ந்தவர்கள் சிலைகளை உருவாக்கி மிகுந்த கண்ணியத்துடன் வீட்டில் வைத்திருப்பார்கள். அவற்றிற்கு இறைவனின் பண்புகளைக் கொடுத்து வணங்குவார்கள். இதனால் அல்லாஹ் இந்த ஷிர்க்கை தடுப்பதற்காகவே சிலைகள் உருவாக்குவதைத் தடுத்துள்ளான்.

அரபு மக்களும் அறியாமைக் காலத்தில் சிலைகளை வணங்கி வந்தார்கள். இதனால் அல்லாஹ்வின் ரஸூல் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் இதனை அகற்றுவதற்காக சிலைகளை உருவாக்குவதையோ அல்லது வைத்திருப்பதையோ தடுத்துள்ளார்கள். ஆனால் இவ்வாறான பொம்மைகள் வைப்பதைத் தடுக்கவில்லை. ஹஸ்ரத் ஆயிஷா சித்தீக்கா (ரலி) அவர்கள் (சிறு வயதில்) பொம்மைகளைக் கொண்டு விளையாடி வந்தார்கள். இவ்வகையான எந்தவொரு பொருளையும் அல்லாஹ்வின் பண்பு கொண்டு அழைத்து இறைவணக்கத்தின் நோக்கத்தோடு வீட்டில் வைப்பது அளவு கடந்த குற்றமும், ஷிர்க்கும் ஆகும்.’’

மேற்கூறிய கேள்வியைக் கேட்ட அதே பெண்மணி கூறுகிறார்கள். அடுத்து நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் மற்ற தோழர்களின் நிழற்படங்களைப் பார்த்து ஆட்சேபித்தேன்.

இதற்கு ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் பதிலளித்தவாறு, ‘‘ஹஸ்ரத் சாஹிபின் நிழற்படம்

இபாதத்திற்காகவோ அல்லது வழிபாட்டிற்காகவோ அல்ல. மாறாக, தூரமான நாட்டில் வசிக்கும் மக்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப (தோன்றிய) தங்கள் இமாமின் முகத்தைப் பார்த்துக் கொள்வதற்காகவே ஆகும். மேலும் ஆங்கிலேயர்களும், பிற மேற்கத்திய நாடுகளின் மக்களும், நிழற்படத்தைப் பார்த்து மனிதனின் நல்லொழுக்கம் போன்றவற்றை அனுமானித்து விடுகின்றனர் என்பதற்காவும் ஆகும். இந்தப் நிழற்படமே தஃவத்தே இலல்லாஹ் (அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைத்தல்) வழிமுறைகளில் ஓர் ஊடகம் ஆகும்.

ஒருவேளை நிழற்படம் வைத்துக் கொள்வதே தடை செய்யப்பட்டுள்ளது என்றால், நீங்கள் சட்டைப்பையில் வைத்திருக்கும் பணம், குழந்தைகளின் புத்தகங்களில் இருக்கும் நிழற்படங்கள் போன்றவை அனைத்தும் தடையாக அல்லவா இருந்திருக்கும்?" என்று கூறினார்கள். ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் பதிலைக் கேட்ட பிறகு, 'இவ்வாறாக நிழற்படம் பற்றிய விவகாரமும் எனக்குப் புரிந்து விட்டது.'

அவர்கள் கூறிய மூன்றாவது சம்பவம் இதுவாகும்: ஒருமுறை சில பெண்கள், தமது முடிகளில் சவுரி முடியைச் சேர்த்து கொண்டையைப் பெரிதாக்கிக் கொண்டிருந்ததை நான் பார்த்தேன். நான் அது பற்றிக் கேட்டபோது, அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள்: இதுவோ பட்டு (ரகத்தின்) சவுரி முடியாகும். (அசல்) முடியை சார்ந்ததல்ல. இதனை அணிந்து கொள்வது ஆகுமானதாகும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலத்தின் அநீதி இழைப்பவர்கள் பெண்களின் மீது பெரும் பெரும் கொடுமை(கள்) செய்தார்கள். அவர்களின் முடியை வலுக்கட்டாயமாக வெட்டி விற்று வந்தார்கள். ஆகவேதான்

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பெண்களின் முடிகளின் மீது முடியை அணிந்து கொள்வதைத் தடுத்திருந்தார்கள்.

### இலக்கிய ஆர்வம்:

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு ஏதேனும் (ஓர்) உர்து வார்த்தையின் சிறப்பான பயன்பாடு பற்றி கேட்க வேண்டியது வந்தால், முதலாவதாக அவர்கள் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களிடம் தான் கேட்பார்கள். (பிறகு) ஒருவேளை இன்னும் சந்தேகம் (எஞ்சி) இருந்தால், நானா ஜான் அவர்களிடமோ அல்லது நானீ ஜான் அவர்களிடமோ கேட்பார்கள். அம்மா ஜான் சில நேரங்களில் கவிதையும் கூறி வந்தார்கள்.

ஒருமுறை ஹஸ்ரத் நவாப் முபாரக்கா பேகம் சாஹிபா மாலேர்கோட்லாவில் இருந்தபோது அவர்களுக்கு (ஒரு) பெருநாளின்போது இந்தக் கவிதை வரிகளை எழுதி அனுப்பினார்கள்:

> நீங்கள் உங்கள் வீட்டில் மகிழ்ச்சியாக இருங்கள்!
> ஒவ்வொரு துக்கம் மற்றும் துயரத்திலிருந்தும்
> தொலைவில் இருங்கள்! சுதந்திரமாக இருங்கள்!
> குழந்தைகளை உங்கள் அருகில் சிரித்து
> விளையாடுவதை பார்த்தவாறு,
> இறையருளால் நீங்கள் கொண்டாடும் (ஒரு)பெருநாள்
> (பல) பெருநாள்களாக இருக்கட்டும்!
> யாருடைய பெண்மகள் பிரிந்துள்ளாரோ அவளின்
> நிலையை என்னவென்று கூறுவேன்?
> நீங்கள் அவளை மறந்துள்ளீர்கள். எனினும், அவளுக்கு
> நினைவில் உள்ளீர்கள்!

ஒருமுறை ஹஸ்ரத் மவ்லானா நூருத்தீன் சாஹிப் (ரலி) அவர்களின் மாணவர்களில் ஒருவர், அவரின் பெயர் மவ்லவி நிஸாமுத்தீன் ஆகும். (அவர்) ஒரு காகிதத்தில் (சமையலறையி –லிருந்து) சமைக்கப்பட்டு வந்த ரொட்டியைப் பற்றி புகார் எழுதி அனுப்பினார்.

ஒருவேளை இந்தக் கிழவியே ரொட்டி சுட்டு வந்தால்
பிறகு அனைவருக்கும் விடுப்பு அளித்து விடுங்கள். வீட்டிற்குச் செல்லட்டும்.
இதைத் தவிர முக்கியமாக வேறெதுவும்
கூறவேண்டுமென்றால்
ரொட்டி சுத்தமாகவும் – நன்றாகவும் இருக்க வேண்டும்!

இவ்விரு கவிதைவரிகளும் ஏனோதானோ என்று இருந்தன. ஆயினும் அவரால் எவ்வாறு எழுத இயன்றதோ எழுதி அனுப்பினார். ஆனால் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் அப்போதே அந்தக் காகிதத்தின் பின்புறம் இந்தக் கவிதை(களை) எழுதி அனுப்பினார்கள்.

சரியான நேரத்தில் சமைத்துக்
கொடுக்கும் இந்தக் கிழவியே எங்களுக்கு
கிடைப்பதற்கரியவள்!
யாருக்கு (இந்தக்) கிழவியின்
கைவண்ணம் விருப்பமில்லையோ
நன்றாக சமைப்பவரை (அவர்) கொண்டுவரட்டும்!

## நற்கூலி பெறுவதற்கான ஆர்வம்:

எந்த சின்னஞ்சிறிய செயலை செய்வதால் நற்கூலி கிடைக்குமோ அதை அன்னார் (ரலி) அவர்கள் கண்டிப்பாகச் செய்வார்கள். ஒருமுறை ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் பைத்துத் துஆவில் தொழுது கொண்டிருந்தார்கள். அருகில் ஒரு

பெண்மணி அமர்ந்து அவர்களுக்கு விசிறிக் கொண்டிருந் –தார்கள். ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் தொழுது முடித்தவுடன், அவரும் அங்கேயே தொழத் துவங்கினார். ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் விசிறியை கையில் எடுத்து அவருக்கு வீசத் தொடங்கினார்கள். அந்த அப்பாவிப் பெண் பதற்றமடைந்து அவமரியாதை ஆகிவிடக் கூடாது என்று எண்ணி சீக்கிரமே தொழுகையை முடித்துக் கொண்டாள்; மேலும் தவ்பா தவ்பா என்றாள். (இதைப்பார்த்து) ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள், 'நான் நற்கூலி பெற வேண்டாமா என்ன?' என்று கூறினார்கள்.

## சிறந்த நிர்வாகமும், கொடுக்கல் வாங்கலும்:

ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் நிலங்களை ஷேக் நூர் அஹ்மது சாஹிப் பராமரித்து வந்தார்கள். ஆனால் அன்னார் (ரலி) தாமே அவற்றைக் கண்காணித்து வந்தார்கள்; அவர்களை அழைத்து விசாரித்து வந்தார்கள். உதாரணத்திற்கு குறிப்பிட்ட வயலில் மக்காச்சோளம் ஏன் விதைக்கப்பட்டுள்ளது? அதனை கோதுமை விளைவிப்பதற்காக விட்டிருக்க வேண்டும் என்பன போன்றவை (விசாரித்து வந்தார்கள்). தாம் கால்நடைகள் மீது அதிக அக்கறை காட்டி வந்தார்கள். ஒருமுறை ஒரு எருமைக்கு இரண்டு மூன்று நாள் தீவனம் போடப்படவில்லை என்றவுடன் அன்னார் தாமே சென்று தீவனம் போட்டார்கள்.

அன்னார் (ரலி) அவர்கள் கணக்குவழக்கில் மிகச் சரியானவர்களாக இருந்தார்கள். அதாவது, ஏதேனுமொரு பொருள் எப்பொழுது வாங்கச் சொன்னாலும் அப்போதே அதற்கான தொகையைச் செலுத்தி விடுவார்கள். ஒருமுறை ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் பாபூ அப்துல் ஹமீது சாஹிபிடம் ஏதோ ஒரு பொருளை லாஹூரிலிருந்து வாங்கும்படி

கூறியிருந்தார்கள். அவர்கள் அந்தப் பொருளை வாங்கி கொடுத்தார்கள்; ஆனால் அம்மா ஜான் (ரலி) அவர்களுக்கு அதன் விலையைக் கூறவில்லை. தற்செயலாக, ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களுக்கும் விலை கேட்பது குறித்து ஞாபகம் இல்லை. இல்லையென்றால், பொதுவான வழக்கமாவது, எப்பொழுது ஏதேனுமொரு பொருள் வாங்கிச் சென்று கொடுத்தாலும் அப்போதே ரூபாய் கொடுத்து விடுவார்கள்.

பிறகு அவர்களுக்கு நினைவிற்கு வந்தவுடன், அன்னார் (ரலி) அப்போதே பாபூ சாஹிப் அவர்களை அழைத்துவர ஆள் அனுப்பினார்கள். மேலும், “இந்தப் பொருளின் விலை என்ன? கூறியிருந்தால் நான் தங்களை வரவழைப்பதற்குப் பகரமாக பணம் (கொடுத்து) அனுப்பியிருப்பேனே!” என்று கேட்டார்கள். பாபூ சாஹிப் கூறினார்கள்: “இதுவோ என் புறமிருந்து தங்களுக்கு அன்பளிப்பாகும். நான் வேண்டுமென்றேதான் விலை கூறவில்லை.”

“இல்லை, எந்தப் பொருளை நானே வாங்கும்படி கூறுகின்றேனோ அதற்கான தொகையை (தாங்கள்) கண்டிப்பாக வாங்கியாக வேண்டும்” என்று அம்மா ஜான் (ரலி) அவர்கள் கூறினார்கள். மேலும் அன்னார் (ரலி) வலுக்கட்டாயமாக தொகையை கொடுத்து விட்டார்கள்.

## விலங்குகள் மீதான பரிவு:

ஹஸ்ரத் ஸாஹிப் ஸாதா மியா(ன்) ஷரீஃப் அஹ்மது சாஹிப் அவர்களுக்கு சிறுவயதிலிருந்தே வேட்டையாடுவதற்கு மிகுந்த ஆர்வம் இருந்தது. ஹக்கீம் அப்துல் அஸீஸ் கான் சாஹிப் அவர்களும் இதே ஆர்வம் உடையவராக இருந்தார்கள். மேலும் பெரும்பாலும் அவர்களை வேட்டையாட உடன் அழைத்துச் செல்வார்கள். ஒருமுறை என்ன நிகழ்ந்ததென்றால்,

மே மாதமாக இருந்தது. ஹக்கீம் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் மியா(ன்) ஷரீஃப் அஹ்மது சாஹிபிடம் மியா(ன்)! துப்பாக்கி கொண்டு வாருங்கள். வேட்டையாடச் செல்வோம் என்று கூறினார்கள்.

மியா(ன்) சாஹிப் மிகுந்த மகிழ்ச்சியோடு துப்பாக்கி கொண்டு வரச் சென்றார்கள். திரும்பி வந்து, அம்மா ஜான் (ரலி) அவர்கள் துப்பாக்கி கொடுக்க மாட்டேன் என்கிறார்கள் என்று கூறினார்கள். இதனைக் கேட்டு விட்டு தாமே ஒரு நபரை அனுப்பி, சற்று நேரத்திற்கு துப்பாக்கி கொடுத்தனுப்புங்கள் என்று கான் சாஹிப் கூறி அனுப்பினார்கள். அன்னார் (ரலி) அவர்கள் பதிலளித்தவாறு, இன்றைய தினங்களில் பறவைகள் முட்டையை அடை காக்கும். நானும் குழந்தைகள் உடையவள். நான் இன்றைய தினங்களில் ஒருபோதும் துப்பாக்கி தரமாட்டேன் என்று கூறினார்கள்.

### மன்னித்தல்:

மன்னித்தல் அன்னாரின் இயல்பின் அங்கமாக இருந்தது. சின்ன விஷயமோ அல்லது பெரியதோ! ஏதேனும் விஷயத்தால் எந்த அளவிற்கு வேதனையும் இழப்பும் ஏற்பட்டிருந்தாலும் சரியே! அன்னார் (ரலி) மன்னித்து விடுவார்கள். அர்ஷத் குரைஷி சாஹிப் ஒரு சுவாரஸ்யமான சம்பவத்தைக் கூறுகின்றார்கள்:

நான் சிறுவனாக இருந்தபோது ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் வீட்டிற்கு வந்து போய் கொண்டிருப்பேன். ஒருமுறை சென்றபோது, அன்னார் (ரலி) அவர்களின் மடியில் தமது பேரன் மியா(ன்) நாஸிர் அஹ்மதை வைத்து கொண்டு அமர்ந்திருக்கக் கண்டேன். என்னைப் பார்த்தவுடன் பையனை கொஞ்சம் வெளியே கொண்டு செல் என்று கூறினார்கள்.

வெளியே என்பதற்கு அன்னாரின் அர்த்தம் வீட்டின் வளாகத்திற்குள் (அறையை விட்டு வெளியே) என்பதாக இருந்தது. சுற்றிக் காண்பிப்பதற்காக வீட்டை விட்டு வெளியே கொண்டு செல்ல சொல்கிறார்கள் போலும் என நான் நினைத்துக் கொண்டேன்.

நான் பச்சிளங்குழந்தையை இடுப்பில் தூக்கியவாறு மகிழ்ச்சியாகத் தோட்டத்திற்குச் சென்றேன். குளிர்ந்த காற்றில் விளையாட்டு காட்டி விட்டு திரும்பியபோது, பீர் இஃப்திகார் அஹ்மது சாஹிப் நடுங்கியவாறு ஓடோடி வருவதைக் கண்டேன். என்னைப் பார்த்ததும் அவர்களுக்கு ஆறுதல் ஏற்பட்டது. மேலும் நீ குழந்தையை தூக்கிக் கொண்டு எங்கே அலைகின்றாய். விரைவில் கொண்டு வா; எல்லா இடமும் தேடுகிறார்கள் என்று கூறினார்கள்.

இதைக் கேட்டுவிட்டு நான் விரைவாக அவர்களோடு நடக்கலானேன். ஏனென்றால், வீட்டில் குழந்தை இல்லாததால், இவன் எங்கு காணாமல் போய்விட்டான் என தேடுதல் துவங்கிற்று. அதிகமான ஆண்கள், பெண்கள் என்னைத் தேடுவதற்காக அங்குமிங்கும் அனுப்பப்பட்டிருந்தனர். நான் அஞ்சியவாறு வீட்டிற்குள் நுழைந்தேன். இப்பொழுது என்னுடன் எவ்வாறு நடந்து கொள்ளப்படுமோ என என் உள்ளம் நடுங்கியது. ஆனால், ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் மீது (எனது) பார்வை பட்டவுடனேயே அச்சம் நீங்கிவிட்டது; மேலும் உள்ளத்தில் அமைதியும், மகிழ்ச்சியும் ஏற்பட்டது. கோபத்தை வெளிப்படுத்துவதற்கோ அல்லது கண்டிப்பதற்கோ பகரமாக, அன்னார் (ரலி) சப்தமாக சிரிக்கலானார்கள்; பிறகு கூறினார்கள்: இவனை அவ்வளவு தூரம், எங்கே கொண்டு சென்றாய்? நான் வெளியே (வேறு இடத்திற்கு) வீட்டின் வளாகத்தில் வைத்திருக்குமாறு தானே கூறினேன் என்றார்கள்.

வீட்டில் ஏதேனுமொரு பணிப்பெண்ணால் ஏதாவதோர் இழப்பு ஏற்பட்டால் அல்லது ஏதாவதொரு பொருள் உடைந்தால், இன்னாலில்லாஹ் ஓதிவிட்டு (அன்னார்) மௌனமாகி விடுவார்கள். கண்டிப்பதற்குப் பகரமாக மன்னிப்பதையே அன்னார் (ரலி) சிறந்ததாக கருதி வந்தார்கள்.

## குறை கூறுதல் மற்றும் புறங்கூறுதல் போன்றவற்றின் மீது வெறுப்பு:

குறை கூறுவது, புறங்கூறுவது அல்லது மற்றவர் இல்லாதபோது புகார் செய்வது ஆகியவற்றை அன்னார் மிகவும் வெறுத்தார்கள். இச்செயல் அவர்களுக்கு சிறிதும் பிடிக்காமல் இருந்தது. ஒரு பெண் இருந்தாள். அவளிடம் இந்த பலவீனம் இருந்தது. இந்த விஷயங்கள் நல்லவையாக கருதப்படுவதில்லை; அல்லாஹ் தடுத்துள்ளான் என அன்னார் (ரலி) அவளுக்குப் புரிய வைத்தார்கள். அந்தப் பெண் (இதனை) கேட்டுவிட்டு விரைவாகக் கூறினாள்: நான் அவ்வாறு செய்கிறேன் என உங்களுக்கு இன்ன பெண் தானே சொன்னாள் என்றாள். அம்மா ஜான் (ரலி) அவர்கள் இதைக் கேட்டு விட்டு மிகவும் கோபமடைந்தார்கள். மேலும் நீ காரணமின்றி தப்பெண்ணம் கொள்கிறாய் என்று கூறினார்கள்.

## துஆ அங்கீகரிக்கப்படுதல்:

குழந்தைகளே! நாம் ஏற்கனவே கூறியது போன்று, ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களுக்கு துஆக்களின் மீது மிகுந்த நம்பிக்கை இருந்தது. அவர்கள் எப்போதும், எல்லா விஷயங்களுக்காகவும் துஆச் செய்வார்கள். மேலும் அல்லாஹ் அன்னாரின் துஆக்களை அதிகமாக அங்கீகரித்தும் வந்தான். இது குறித்து, நாம் உங்களுக்கு சம்பவம் ஒன்றைக் கூறுகிறோம்.

மாடி புஜ்ஜியான் என்ற கிராமத்தில், மியா(ன்) அல்லாஹ் ரக்கா என்ற ஓர் அஹ்மதி கடைக்காரர் இருந்தார். அவர் கிராமத்திலிருந்து தானியங்களை வாங்கி அக்கம் பக்கத்தில், அதாவது, சுற்றுப்புறத்திலுள்ள சந்தைகளில் விற்று வந்தார். ஒருநாள் அவர் காதியான் சென்றிருந்தார். அவருடைய குதிரை ஓடி விட்டது. தானாகவே (கயிற்றை) அவிழ்த்துக் கொண்டு ஓடி விட்டதா அல்லது திருடன் எவனாவது அவிழ்த்துச் சென்று விட்டானா என்பதை அல்லாஹ்வே நன்கு அறிவான். இதனால் அந்த அப்பாவி மிகுந்த குழப்பத்திற்காளானார். காதியான் மற்றும் அதன் அருகில் எத்தனை கிராமங்கள் இருந்தனவோ, அனைத்திலும் தேடினார். ஆனால் குதிரை கிடைக்கவில்லை.

அவர் விரக்தியடைந்து ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களிடம் சென்று துஆவிற்காக விண்ணப்பித்தார். அன்னார் (ரலி) அவர்கள் துஆ ஒன்றை தாளில் எழுதி, நானும் துஆச் செய்வேன். நீங்களும் இந்த துஆவை படித்தவண்ணம் செல்லுங்கள். மேலும் குதிரையை மீண்டும் தேடுங்கள். கிடைத்துவிடும் இன்ஷா அல்லாஹ் என்று கூறினார்கள்.

மியா(ன்) அல்லாஹ் ரக்கா துஆவைப் படித்தவாறு, தாளின் மையை காயச் செய்வதற்காக ஊதியவாறு லங்கர் கானாவிலிருந்து கொஞ்ச தூரம் சென்றிருந்தார்கள். அப்போது குதிரை முன்னால் ஓடி வந்து கொண்டிருப்பதைக் கண்டார்கள். மேலும் இவ்வாறாக ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் துஆவால் குதிரை கிடைத்து விட்டது.

அன்புக் குழந்தைகளே! அனைத்து சம்பவங்களையும் படித்த பிறகு, மேலும் என்னவெல்லாம் நமக்கு ஹஸ்ரத் டாக்டர் மீர் முஹம்மது இஸ்மாயீல் சாஹிப், ஹஸ்ரத் நவாப் முபாரக்கா பேகம் சாஹிபா மற்றும் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப்

ஆகியோர் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களைப் பற்றி கூறியுள்ளார்களோ அவை அனைத்தையும் கண்டபிறகு நாம் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றி (எவ்வித) தாமதமுமின்றி இவ்வாறு கூறிவிடலாம்: அதாவது அன்னார் (ரலி) மிக அதிகமாக ஸதக்கா கொடுக்கக் கூடியவராக, எல்லா சந்தாக்களிலும் பங்கேற்கக் கூடியவராக இருந்தார். ஐவேளை தொழுகைகளையும் முதன்மையான நேரத்தில் தொழக் கூடியவர். இன்னும் கூற வேண்டுமென்றால், தஹஜ்ஜுத் மற்றும் இதர நஃபில் தொழுகைகளையும் தொழக் கூடியவர். உள்ளத்தில் எப்போதும் இறையச்சம் இருந்தது. அன்னார் எவ்வாறு ஒரு தொண்டாற்றக் கூடிய நன்றியுணர்வு மிக்க மனைவியாக இருந்தார்களோ அதேபோன்று, குழந்தைகளுக்கு ஓர் ஒப்பற்ற தாயாக விளங்கினார்கள்.

வீட்டு வேலைகளையும் மற்ற ஏற்பாடுகளையும் மிகச் சிறந்த முறையில் செய்வார்கள். பெரும் உழைப்பாளியாக இருந்தார்கள். பொறுமை, நன்றியுணர்வுடன் செயல்பட்டு வந்தார்கள். பரந்த மனப்பான்மையுடையவர்களாகத் திகழ்ந்தார்கள்; திறந்த உள்ளம் உடையவராக விளங்கினார்கள். யார் என்ன கூறினாலும், ஏதேனும் வேதனை தந்த போதிலுங்கூட ஒருபோதும் முறையீடு செய்ய மாட்டார்கள். இன்னும் கூறுவதாயின், வெளிப்படுத்தவும் மாட்டார்கள். வேதனை அளிப்பவர் தானே மௌனமாகவும் வெட்கப்படவும் செய்வார். முறையீடு, குறைகூறுதல், புறங்கூறுதல் போன்றவற்றை தாமும் செய்ய மாட்டார்கள்; (அவற்றை) கேட்பதையும் விரும்ப மாட்டார். உள்ளத்தில் எவருக்கெதிராகவும் எந்தக் காழ்ப்புணர்ச்சியும் இருந்ததில்லை. முழுக்க முழுக்க அன்பு மட்டுமே இருந்தது.

இறையன்பு, அவனது தூதர் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது அன்பு, அவனது வேதம் மீது அன்பு மற்றும் அவனது அடியார்களின் மீது அன்பு ஆகியவற்றால் அன்னாரின் உள்ளம் நிறைந்திருக்கும்.

அனைவருக்கும் உதவுவது, சுக, துக்கங்களில் பங்கெடுத்தல், ஒவ்வொருவரின் மகிழ்ச்சியான (விஷயத்திலும்) மனப்பூர்வமாக கலந்து கொள்வது அன்னாரின் இயல்பின் அங்கமாக இருந்தது. நகைச்சுவை உணர்வு உடையவராகவும் இருந்தார்கள். கவிஞராகவும் இருந்தார்கள். இலக்கியம் மற்றும் கல்வியோடு பற்றும் மதிப்பும் இருந்தது. தூய்மையை அதிகம் விரும்புபவராக இருந்தார்கள். தூய்மையான ஆடையை அணிவார்கள். நறுமணம் (சென்ட்) அன்னாருக்கு மிகவும் பிடித்திருந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் அன்னாருக்காக நறுமணத்தையும் மல்லிகைப்பூ எண்ணெய்யும் குறிப்பாக வாங்கச் சொல்வார்கள். ஆடையுடன் சேர்த்து தமது வீட்டையும் தூய்மையாக வைத்திருப்பார்கள். அன்னாரின் அறையில் எப்போதும் ஊதுவத்தி, ஹர்மல் மற்றும் சாம்பிராணி புகையின் நறுமணத்தால் வாசனை வந்து கொண்டிருக்கும். உணவிலும் நறுமணம் வர வேண்டும் என்பதற்காக வெந்தயத்தைப் போடுவார்கள்.

அன்னார் (ரலி) அவர்களின் தாய்வழிப் பாட்டனாருடைய வீட்டின் தரப்பிலிருந்து உறவினரான அஹ்மதி அல்லாத ஒரு சகோதரர் இருந்தார். அவர் ஒருமுறை குளிர் காலத்தில் காதியான் வந்தார். அவர் காதியான் மற்றும் காதியானைச் சேர்ந்தவர்களால் மிகவும் தாக்கத்திற்குள்ளானார். ஆயினும், அவரது அக்கா நுஸ்ரத் ஜஹான் பேகம் சாஹிபா அவர்கள், அவர் மீது சிறப்பான தாக்கத்தை ஏற்படுத்தினார்கள். அவர் கூறுகிறார்:

அக்காவின் நடைமுறையாவது, அவர்கள் அதிகாலைப் பொழுதில் என்னை சந்திக்க வருவார்கள். கதவைத் தட்டிவிட்டு உள்ளே வருவார்கள். அஸ்ஸலாமு அலைக்கும் கூறி பேச்சைத் துவங்கிவிடுவார்கள். நான் படுக்கையை மடித்துவிட்டு கட்டிலில் உட்கார்ந்திருப்பேன். மேலும் அவர்கள் உலாவியவாறு பேசிக் கொண்டிருப்பார்கள். குரலில் அழுத்தம் இருந்தது. பார்வை நன்றாக இருந்தது. கை கால்கள் திடமாக உடல் ஆரோக்கியமாக இருந்தது. மேலும் மிகவும் சுறுசுறுப்பாக இருந்தார்கள். பேச்சை கவனமாக கேட்பார்கள்.

மேலும் ஒவ்வொரு விஷயத்திற்கும் அறிவுப்பூர்வமான பதிலளிப்பார்கள். வாழ்வின் ஒவ்வொரு அம்சத்தையும் பேசுவார்கள். மேலும் எவ்வித அச்சமுமின்றி தமது எண்ணங்களை வெளிப்படுத்துவார்கள். வெற்றிலை போடும் ஆர்வம் அதிகம் இருந்தது. பேசிக்கொண்டே இருப்பார்கள்; வெற்றிலை போட்டுக் கொண்டே இருப்பார்கள்! தில்லியைச் சேர்ந்தவர்களைப் போன்று ஆடை இருந்தது. மேலாடையும் தளர்வற்ற கீழாடையும், மேலாடைமீது ஸ்வெட்டர் அணிந்து காஷ்மீரிய துபட்டாவை தலையும் மூடும் அளவிற்கு சுற்றி அணிந்திருப்பார்கள். மேலும் மஃப்ளரும் தெரியும். மேலும் ஒரு கோட் அணிந்து அனைத்து ஆடைகளையும் முறைப்படுத்தி வந்திருப்பார்கள். ஒரு கையில் தஸ்பீஹ் மற்றும் மறுகையில் கையுறை இருக்கும்.

காலையிலேயே தொழுகைக்குப் பிறகு வீட்டை விட்டு வெளியேறுவார்கள். முதலில் உறவினர்களிடமும், பிறகு நண்பர்கள் மற்றும் ஜமாஅத்தின் மற்ற நல்லடியார்களின் வீட்டிற்கும் செல்வார்கள். இதில் நலம் விசாரித்தல், நோயாளிகளை நலம் விசாரித்தல் போன்ற அனைத்தும்

அடங்கும். ஒருபுறம் சிறுபிள்ளைகளுக்கு சிகிச்சை செய்வார்கள். மறுபுறம் பெரியவர்களை நலம் விசாரிப்பார்கள். சில சந்தர்ப்பங்களில் மருந்தைச் சொல்வார்கள்; சில சந்தர்ப்பங்களில் தாமே (மருந்து) ஆயத்தம் செய்து கொடுப்பார்கள்.................. மேலும் சிகிச்சை அளிப்பதில் அவர்களுக்கு நல்ல திறமை இருந்தது.................. (இந்தப் பணிகளையெல்லாம் செய்துவிட்டு) பத்து, பதினோறு மணிக்கு வீட்டிற்குச் சென்று விடுவார்கள். மதிய உணவிற்குப் பிறகு ஓய்வெடுப்பார்கள். அஸ்ர் தொழுகை வரை வீட்டில் மருமகள்கள், மகள்களை சந்திப்பார்கள். மாலையில் மீண்டும் நடைபயிற்சிக்கு சென்று விடுவார்கள்.

இந்த நிகழ்வுகளுக்கேற்ப ஏறத்தாழ தினசரி செயல்பட்டு வந்தார்கள். அப்போது அவர்களின் வயது 54 ஆகும். எனினும் எண்ணத்தில் உறுதியானவர்கள் ஆவார்கள். தமது மனவுறுதியில் திடமானவர்கள் ஆவார்கள். செயலில் வலிமையானவர் ஆவார்கள். ஒரு கம்பீரமான தளபதியைப் போல காதியானின் மக்களிடம் தாக்கத்தை ஏற்படுத்துபவராக இருந்தார்கள். எவ்வாறு களங்கமின்மை மற்றும் அன்புடன் சந்திப்பார்களோ அவ்வாறே கம்பீரம் மற்றும் தாக்கத்துடன் செயல்படுவார்கள்.

இப்படிப்பட்ட செயல்பாடுகளின் மீது அவர்களுக்கு ஆர்வம் இருந்தது. மேலும் இவற்றையே தமது குடும்பத்திற்கு தேவை என்பது போல் தமது நடைமுறையாக கொண்டிருந்தார்கள். ஒருவர் எந்த சமுதாயம், எந்த மதம் என்ற பாரபட்சமின்றி அனைவரையும் சிறந்த அணுகுமுறையுடன் சந்திப்பார்கள். தம்மால் இயன்ற அளவிற்கு மக்களுக்கு உதவுவார்கள். அமைதியும், ஆறுதலும் அளிப்பார்கள்.

சுருங்கக்கூறின், அன்னார் (ரலி) மிக உயர்ந்த நல்லொழுக்கங்களின் எஜமானராக இருந்தார்கள். அன்பிற்குரிய

நபி (ஸல்) அவர்களின் நல்லொழுக்கம், நடைமுறை மற்றும் ஹதீஸிற்கேற்ப செயல்படக்கூடியவராக இருந்தார்கள். ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் இந்த உயர்ந்த முன்மாதிரியை ஜமாஅத் பார்த்தது; மேலும், அன்னார் மீது அன்பு வைத்தது; அன்பு பெற்றது. அன்னார் ஜமாஅத் மக்களுக்கு சொந்தத் தாயைக் காட்டிலும் உயர்ந்தவராக இருந்தார்கள்.

## ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் மரணம்:

அன்னாரின் மரண நேரம் நெருங்கியபோது, முழு ஜமாஅத்தும் எவ்வாறு துடிதுடித்து அழுதவாறு இறைவனிடம் துஆக்கள் செய்து கொண்டிருந்தது என்றால், ஒருவர் தமது சொந்தத் தாயிற்காக கேட்பதைப் போன்று கேட்டுக் கொண்டிருந்தது. ஆனால் இறைவனின் நியதி வந்தடைந்தது. அவனது அழைப்பு வந்துவிட்டது. 25 நாட்கள் நோயுற்றிருந்து, ஏப்ரல் 20, 1952-ல் அன்னார் (ரலி) தமது உண்மையான எஜமானனிடம் சென்றடைந்தார்கள். அன்னார் காதியானில் இருந்தே கதர் போன்ற ஒரு துணியும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு மேலாடையும் தம்முடன் கொண்டு வந்திருந்தார்கள். மேலும், "இவற்றை நான் என் கஃபனிற்காக வைத்துள்ளேன்" எனக் கூறி வந்தார்கள்.

ஆகவே, அன்னாருக்கு முதலில் அந்த அருளுக்குரிய மேலாடையும் பிறகு அந்த கஃபனும் அணிவிக்கப்பட்டது. ரப்வாவிலுள்ள பெஹிஷ்த்தி மக்பராவில் அன்னார் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் அன்னாரின் வஃபாத்தைப் பற்றிக் கூறுகையில் கூறுகின்றார்கள்:

"இவ்வருடம் அஹ்மதிய்யத்தின் வரலாற்றில் மிக முக்கியமான சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளது. அது ஹஸ்ரத்

அம்மா ஜான் (ரலி) அவர்களின் மரணம் ஆகும். அவர்களின் இருப்பு நமக்கும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குமிடையில் ஒரு சங்கிலித் தொடர்) போன்றதாக இருந்தது...... அன்னார், நமக்கும், ஹஸ்ரத் (அலை) அவர்களுக்கும் இடையில் ஓர் உயிருள்ள தொடர்பாக இருந்தார்கள். இந்தத் தொடர்பு அன்னாரின் வஃபாத்தால் முடிவுற்றது.''

அடுத்து, ஹஸ்ரத் நவாப் முபாரக்கா பேகம் சாஹிபா அவர்கள் அன்னாரின் வஃபாத்திற்குப் பிறகு ஒரு கட்டுரையில் எழுதினார்கள்:

"நான் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் நற்குறிப்பைக் கூறுவதற்குக் காரணம், அவர்கள் மிகவும் அன்பு செலுத்தும் தாயாக இருந்தார்கள் என்பதற்காக மட்டும் அல்ல. இன்று அவர் இவ்வுலகில் இல்லை என்பதற்காகவும் அல்ல. மேலும் அவர்கள் மீது எனக்கு மிகுந்த அன்பு இருந்தது என்பதற்காகவும் அல்ல. மாறாக, தன் தரப்பிலிருந்து அனுப்பப்பட்ட சீர்திருத்தவாதிக்காகத் தேர்ந்தெடுக்கும் அளவிற்குத் தகுதி வாய்ந்தவராக ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களை அல்லாஹ் உண்மையிலேயே ஆக்கினான் என்பதற்காக மட்டுமே ஆகும். இது உண்மை; முற்றிலும் உண்மை ஆகும். தனது சிறப்பான அருள் என்ற பட்டத்தை வழங்கி தனது சீர்திருத்தவாதிக்காக அளித்து விடுமளவுக்கு அன்னார் (ரலி) அவர்கள் இருந்தார்கள்.''

இறுதியில் எழுதுகிறார்கள்: எனது தாயார் நிகரற்ற தாயாக இருந்தார்கள். அனைத்து அஹ்மதிகளின் தாய். அவர்கள் தற்போது மௌனமாக உள்ளார்கள். ஆனால் இறைவன் நம்மை அவர்களுடன் சந்திக்க வைக்காத வரை நாம் அன்னாரின்

பிரிவின் துயரத்தை என்றென்றும் அனுபவித்து (உணர்ந்து) கொண்டிருப்போம்.

வாழ்நாள் முழுவதும்
அவர்களின் நினைவு துடிக்க வைக்கும்!
அவர்கள் (திரும்பி) வரமாட்டார்கள்.
ஆனால் நினைவு வந்து கொண்டிருக்கும்.

* * * * * * *